Computer Today

வைகாசி - 2015

# கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

தகவல் தொழில்நுட்ப மாத இதழ்

விலை - 80/-

பள்ளிக் குழந்தைகளுக்கான 5 திறந்தமூல மென்பொருள்கள்

இணைய உலாவிகள் பத்து

உங்கள் பதிவுகள் எங்கெங்கே சுடப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள....

சென்னையில் பில் கேட்ஸ் பிறந்திருந்தால்...

facebook விவாகரத்துக்கள்

Ram Random Access Memory இதன் பயன் என்ன தெரியுமா?

தரம் 10 மாணவர்களுக்கான ICT

கையால் குறுஞ்செய்தி எழுதி அனுப்பலாம் அசத்தும் கூகிள்!

Apple கிளப்பிய சர்ச்சை

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் கணனிப் பூங்கா

intel


# Your one stop shop for everything related to PC

0777 570 124

northernpcpark

info@pcpark.co

www.pcpark.co



hp ASUS EPSON DELL

## Northern PC PARK PVT (Ltd)

SHOW ROOM 1 : #269E, Palay Road, Kantharmadam, Jaffna. Tel : 021 222 0388

SHOW ROOM 2 : #10, Muddaskadai Junction, Stanly Road, Jaffna. Tel : 021 222 2050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழினுள்ளே.....


- அன்ரொயிட் இனிக் கணினிகளிலும்... - 02
- கணினியின் வரலாறு ..... - 03
- கணினி பிறந்த கதை – கவிதை..... - 06
- அன்புக் கணவன்...... - 07
- WhatsApp பற்றி..... - 08
- கணினிப் பராமரிப்பு ..... - 09
- வலையோடி பதில்கள் ......... - 12
- Samsung Galaxy S6 ...... - 14
- RAM இன் பயன்கள்....... - 16
- பில்கேட்ஸ் சென்னையில்..... - 18
- இணைய நடு நிலைமை .......... - 19
- Hard Disk பிழைகளை நீக்க ..... - 21
- கையால் குறுஞ் செய்தி .... - 22
- ICT - தரம் 10 ....... - 24
- Hack செய்யப்பட்ட facebook.... - 27
- Folder இற்கு நிறம் ..... - 28
- இணைய உலாவிகள் பத்து.... - 29
- பயனுள்ள ஒரு பயன்பாடு ..... - 31
- சுடப்படும் பதிவுகள் ...... - 32
- முகநூல் விவாகரத்துக்கள் ... - 34
- Key Logger ஆபத்தானது .... - 35
- கணினி பற்றி பெற்றோருக்கு ..... - 37
- VLC இன் சிறப்பு..... - 38
- பள்ளிக் குழந்தைகளுக்கானது.... - 39
- Apple இன் சர்ச்சை .... - 40
- கணிதத்திற்கு ஓர் இணையம்..... - 44
- Drivers களை மறைக்க.... - 46
- Mobile Hang ஆகுதா? ..... - 47



**கம்ப்யூட்டர் ருடே**

**கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை**

அச்சிட்டு வெளியிடுபவர்கள் :

**Uthayan IT Island**

359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 021 5 677 600


**கம்ப்யூட்டர் ருடே யில் உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா ?**

- 359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

அல்லது

info@computertoday.lk

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து......

வாசகர்களுக்கு வணக்கம்!

மீண்டும் வெளிவர ஆரம்பித்துள்ள **கம்ப்யூட்டர் ருடே** சஞ்சிகைக்கு வாசகர்களாகிய நீங்கள் தந்த மிகப்பெரிய வரவேற்பிற்கு மத்தியில் இன்னும் ஒரு இதழில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.

வாசகர்களின் வரவேற்பு மற்றும் ஆலோசனைகள் உண்மையிலேயே எமக்கு மிகப்பெரிய ஒரு நம்பிக்கையை தந்துள்ளது. தொலைபேசியிலும் மின்னஞ்சல் மூலமாகவும் கடிதம் ஊடாகவும் உங்களது ஆதரவு எம்மை வந்தடைந்ததில் எமது இந்த முயற்சி எமது மக்களிற்கு தேவையான ஒன்றே என்பதை உறுதிபட உணர்த்தியுள்ளது.

இன்றைய காலத்தில் தகவல் தொழில்நுட்பம் என்பது அனைவரது வாழ்விலும் இன்றியமையாத ஒன்றாக மாறிவருகிறது. எந்தவொரு வேலைவாய்ப்பினை பெறுவதாயினும் கணினி தொடர்பான பொதுவான அறிவென்பது கட்டாயமானதாக பார்க்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தொடர்ச்சியான பதவிஉயர்வு மற்றும் தொழில் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான புலமை மிகவும் முக்கியமானதாக அமைகிறது.

மேலும், பாடசாலை கல்வியில் கற்றல், கற்பித்தல் ஆகிய இரண்டு செயற்பாடுகளிற்கும் கணினி மற்றும் இணையம் என்பன இன்றியமையாததாக மாறிவருகிறது.


எனவே கணினி, இணையம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் நாம் அனைவரும் இயலுமான அளவு புலமை பெற்றிருப்பது அவசியமானதாகிறது.

உங்களுக்கான அந்த அறிவூட்டலின் ஒரு பகுதியினை '**கம்ப்யூட்டர் ருடே**' ஊடாக செய்வதில் பெருமைகொள்கிறோம்.

இன்னும் ஒரு 'கம்ப்யூட்டர் ருடே' இதழில் உங்களை சந்திக்கும் நம்பிக்கையுடன்.....

**அன்புடன்**
**ஆசிரியர்**

## அன்றொயிட் பயன்பாடுகளை இனிக் கணினிகளிலும் இயக்கலாம்




உலக அளவில் எண்பது சதவீத smartphone இல் பயன்படுத்தப்பட்டு வரும் கூகுளின் பிரபல அன்றொயிட் இயங்குதளம் தனது பயன்பாடுகளை கணினியிலும் இயங்கும் வகையில் விரைவில் வெளியிட உள்ளது. கூகுள் நீண்ட நாள் கனவுத்திட்டமாக ARC. (App Runtime for Chrome ) திட்டத்தை முயற்சி செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக அன்றொயிட் பயன் பாடுகளை எல்லா கருவிகளிலும் இயங்க வைக்கும் திட்டத்தில் களமிறங்கியுள்ளது.

இந்த ARC திட்டம் செயற்பாட்டுக்கு வந்தால் குரோம் உலாவிகள் நிறுவியிருந்தால் போதும். விண்டோஸ், லினக்ஸ், மக் மற்றும் குரோம் உள்ளிட்ட எல்லா கணினி இயங்குதளங்களிலும் அன்றொயிட் பயன்பாடுகள் இயங்கும். அன்றாய்டு பயன்பாடுகளுக்கென்றே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த ARC, குரோம் இயங்குதளத்தில் இயங்கவே கொண்டு வரப்பட்டது. ஆனால், இப்போது அனைத்து இயங்குதளங்களிலும் இயங்கும் வகையில் வெளிவரவுள்ளது. அன்றொயிட்டுக்கு அதிக பயன்பாடுகளை வடிவமைக்கும் மென் பொருள் நிரலாளர்களுக்கு இந்த ARC திட்டம் பெரிய வாய்ப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியின் வரலாறு



இன்றைய மனித வாழ்வின் அனைத்து நடைமுறைகளிலும் கணினியின் ஆதிக்கத்தைக் காணமுடிகிறது. கணினியைப் புறக்கணித்துவிட்டு மனித வாழ்க்கையை மேம்படுத்த முடியாது.

### கணினி

கணிக்கும் பணியைச் செய்யும் சாதனம் கணினி. பயனரிடமிருந்து உள்ளீடுகளைப் பெற்று, அவற்றைச் செயல்முறைப்படுத்தி, பயனுள்ள தகவலாய் மாற்றி, புரியும் வடிவில் வெளியிடும் ஒரு மின்னணுச்சாதனம் கணினி.

### கணினி பிறந்த கதை

மரத்திலிருந்து அப்பிள் பழம் கீழே விழுந்தது. அதைப் பார்த்ததும் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்தார். அதைப்போல, ஒரு திடீர் நிகழ்வின் போது மனிதன் கணினியைக் கண்டுபிடித்து விடவில்லை. பல ஆண்டுகளின் பரிணாம வளர்ச்சியில் உருவானதே கணினி.


### கணிக்கும் பணி

கணிக்கும் பணிக்காக உருவாக்கப்பட்டதே கணினி. கணிக்கின்ற பணி மனித குலத்துக்குப் புதியது அன்று. எண்ணுவதும் கணக்கிடுவதும் நீண்ட காலமாக நடைபெற்று வருவதே. ஆதிகாலத்தில் மனிதன் பண்டமாற்று முறையில் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்று வந்தான். மனிதனின் தேவை பெருகப் பெருக பண்டமாற்று வணிகம் எளிதாக இருக்கவில்லை. எனவே பண்டத்தின் மதிப்பைப் பண மதிப்பாகக் கணக்கிடும் முறை வந்தது. அதன் பிறகு எண்ணுவதும் கணக்கிடுவதும் ஒரு கலையாகவே வளரத் தொடங்கின. வாழ்க்கை முறை சிக்கலாகிப் போனது. கணக்கீட்டு கணிப்பு சாதனங்கள் உருவாக்கப்பட்டன. கணிப்பு சாதனங்களின் உச்சகட்ட வளர்ச்சியில் கணினி பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் கணினி



ஆசியா பகுதியில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட 'அபாக்கஸ்' கருவியே உலகின் முதல் கணினி. மரச்சட்டங்களில் பொருத்தப்பட்ட கம்பிகளில் மணிகள் கோர்க்கப்பட்டிருக்கும். தமிழில் 'மணிச்சட்டம்' என்ற பெயரில் பயன்பாட்டில் இருந்தது. நம் நாட்டில் இன்றைக்கும் 'அபாக்கஸ்' மூலம் மாணவர்களுக்குக் கணக்கீடுகளைக் கற்றுத் தரும் பயிற்சி மையங்கள் ஏராளமாய் உள்ளன.

## வரலாறு

பதினாறாம் நூற்றாண்டில் நேப்பியர் ( Napier ) என்பார் மணிச்சட்டத்தைப் போன்ற ஒரு கணக்கீட்டுக் கருவியை உருவாக்கினார். இது நேப்பியர் போன்ஸ் (Napier Bones) என்று அழைக்கப்பட்டது.

## தந்தைக்கு உதவி


கணித மேதை பிளைசி பாஸ்கலின் (Blaise Pascal) தந்தை வரிவசூலிப்பவராகப் பணியாற்றி வந்தார்.



Blaise Pascal

தினமும் இரவு வெகுநேரம் வரை வரிவசூல் கணக்குடன் போராடிக் கொண்டிருப்பார். கல்லூரி மாணவராய் இருந்த பாஸ்கல் தன் தந்தையின் கணக்குகளில் உதவ விரும்பினார். தன்னுடைய 19 ஆவது வயதில் கூட்டல் கணக்குகளை எளிதாகச் செய்ய உதவும் ஒரு கருவியை உருவாக்கினார். 'எண்முறைச் சக்கரக் கணிப்பி' (Numerical Wheel Calculator) என்று அக்கருவிக்குப் பெயரிட்டார்.


## கூட்டல்



செவ்வக வடிவ வெண்கலப் பெட்டியில் உருளக் கூடிய எட்டு சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கும். எட்டு இலக்க எண்களைக் கூட்ட இது பயன்பட்டது. 'கூட்டல் எந்திரம்' என்றும் 'பாஸ்கலைன்' என்றும் இக்கருவி அழைக்கப்பட்டது.

## கூட்டலும் பெருக்கலும்

ஜெர்மன் நாட்டுக் கணிதமேதையும் தத்துவ ஞானியுமான கொட்பிரைட் வில்கெம் லெப்னிக் (Gottfried Wilhelm Leibniz ) 1694 -ஆம் ஆண்டில், பாஸ்கலை எந்திரத்தை மேம்படுத்திப் புதிய கருவியை உருவாக்கினார். கூட்டல் கணக்கு மட்டுமின்றி கழித்தல், பெருக்கல்,வகுத்தல் என அனைத்துக் கணக்கையும் அக்கருவியில் எளிதாகச் செய்ய முடிந்தது.




Gottfried Wilhelm Leibniz




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கீடு




இன்றைய நவீன கணினியின் தந்தை (Father of Computer) என்று அழைக்கப்படுபவர், இங்கிலாந்து நாட்டுக் கணிதப் பேராசிரியர் சால்ஸ் பாபேஜ் (Charles Babbage (1791-1871) ஆவார். கணிதத்தில், வேறுபாட்டியல் நிகர்ப்பாடுகளை (Differential Equations) தீர்வு செய்யக் கூடிய வேறுபாட்டுப் பொறி (Difference Engine) என்னும் எந்திரத்தை உருவாக்கினார். நீராவியால் இயங்கும் மிகப்பெரிய எந்திரம். இந்த எந்திரத்தில் கணினி நிரல் (Program) சேமிக்கப்பட்டிருக்கும். கணக்கீடுகளைச் செய்து விடையைத் தானாகவே அச்சிட்டுத் தரும்.

## பகுப்பாய்வுப் பொறி




Charles Babbage

வேறுபாட்டுப் பொறியில் பத்து ஆண்டுகள் பணிபுரிந்த பாபேஜ். உலகின் முதல் கணினி என்று கூறப்படும் பகுப்பாய்வுப் பொறியை (Analytical Engine) உருவாக்குவதில் முனைப்புக் காட்டினார்.



ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகளான லேடி அகஸ்டா அடா லவ்லேஸ்(Augusta Ada Lovelace பாபேஜின் பணிகளில் துணைநின்றார். பகுப்பாய்வுப் பொறியின் வடிவமைப்புக்கு உதவினார். அப்பொறியில் உட்செலுத்திச் செயல்படுத்தக் கூடிய ஆணைகள் அடங்கிய நிரலை (Program) உருவாக்கினார். உலகின் முதல் கணினி நிரலர் (Computer Programmer) என்னும் பெருமையைப் பெற்றார். 1980-களில் அமெரிக்க நாட்டுப் பாதுகாப்புத்துறை, புதியதாக உருவாக்கிய கணினி மொழிக்கு 'அடா' (Ada) எனப் பெயரிட்டு அவரைச் சிறப்பித்தது.

## வல்லுநர்களின் பங்களிப்பு




Vannevar Bush

தொடர்ந்து வந்த காலங்களில் பல்வேறு பொறியியல் வல்லுநர்கள் கணினி வளர்ச்சியில் பங்காற்றியுள்ளனர். 1931-ஆம் ஆண்டில் வன்னெவர் புஷ் (Vannevar Bush) சிக்கலான வேறுபாட்டியல் நிகர்ப்பாடுகளைத் தீர்வு செய்ய உதவும் கணிப்பியை உருவாக்கினார். 1941-ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டுப் பொறியியலாளர் கொனார்டு ஸுஸ் (Konrad Zuse) விமானங்களையும் ஏவுகணைகளையும் வடிவமைக்க உதவும் 'இஸட்-3' என்னும் கணினியை வடிவமைத்தார். இதன்பிறகு ஏற்பட்ட கணினியின் வளர்ச்சிப் போக்கினை கணினியின் தலைமுறைகளாகப் பகுத்து பின்னர் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி பிறந்த கதை...




கண்ணே! மணியே! கதை கேளு
கணினி பிறந்த கதை கேளு
மண்ணில் வாழும் மனிதனுக்கு
அணியாய்த் திகழும் கருவியது!
எண்ணும் எழுத்தும் கண்ணெனவே
அன்றே சொன்னான் வள்ளுவனும்
விண்ணையும் காணப் பயன்படுமே
கணினி என்னும் கருவியது!
எண்ணும் எழுத்தும் கண்ணாக
எழுதித் தந்த புலவரவர்
பண்ணாய்ப் பாடிய பாட்டுண்டு
கல்லில் வடித்த கதையுண்டு
ஓலையில் எழுதிய நாளுண்டு
தாளில் வரைந்த கையுண்டு
விண்ணை எட்டிய அறிவதனால்
கணினியில் பொறிக்கும் நாட்களிவை!

ஓலை வெந்து மடிந்தாலும்
காகிதம் நைந்து இறந்தாலும்
காலையில் பொறித்த கணினியிலே
காலம் காலம் வாழ்ந்திடுமே!
மாலையில் வரைந்த உருவமெலாம்
ஞாலம் முழுதும் பரவிடுமே
நாளை எழுதும் எழுத்தெல்லாம்
இணைய தளத்தில் பறந்திடுமே!
கண்ணே! மணியே! கதை கேளு
கணினி வளர்ந்த கதைகேளு
நாளை நீயும் வளர்வாயே
கணினியில் நீயும் கற்பாயே
வாழும் கணித்தமிழ் வளர்ந்திடுமே
தரணியில் வெற்றி கண்டிடுமே
நாளும் கணினியில் கற்றிடுவாய்
நலமாய் உலகில் உயர்ந்திடுவாய்!

**-என்.வி. சுப்பராமன், சென்னை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படிக்கு உன் அன்புக் கணவன்......

திருவாளர் கந்தன் ஒரு முறை வெளியூர் சென்றிருந்த வேளை ஒரு பெரிய விடுதியில் தங்கினார். அவரது அறையில் ஒரு கணினி இருந்தது. அவர் தன் மனைவிக்கு ஒரு மின்னஞ்சல் (email) அனுப்ப உத்தேசித்துக் கணினியை இயக்கி மின்னஞ்சலைத் தட்டச்சினார். அவசரத்தில் to address என்கிற இடத்தில் அவரது மனைவியின் மின்னஞ்சல் முகவரியைத் தட்டாமல் வேறு தவறான முகவரியை எழுதிவிட்டார்.

திருவாளர் கந்தன் தான் செய்த பிழையை உணர வேயில்லை. மின்னஞ்சலும் பெறுநர் (recipient) முகவரிக்குச் சென்றுவிட்டது.

வேறு ஒரு நகரம். அங்கே ஒரு விதவை. அவள் தனது கணவனை இரண்டு நாட்களுக்கு முன்னர் இழந்தவள். இறந்துபோன தனது கணவனின் இறுதிக் கிரியைகள் முடிந்து துக்கம் தாங்காமல் அழுதுகொண்டிருந்தாள். பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு தனது Laptop ஐ திறந்து ஏதேனும் முக்கியமான மின்னஞ்சல் வந்திருக்கிறதா எனப் பார்வையிட்டாள். அவளுக்கு வந்திருந்த முதல் மின்னஞ்சல் கடிதத்தைப் படித்ததும் அவளுக்கு மயக்கம் வந்து தலை சுற்றிவிட்டது. தரையில் வீழ்ந்துவிட்டாள். சிறிது நேரத்துக்குப் பிறகு அந்த விதவையின் மகன் அந்த அறைப்பக்கமாக வந்தார். தனது தாய் தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். Laptop இயக்கத்திலேயே இருந்தது. கணினியில் தெரிந்த வாசகத்தைப் படித்தார். அதில் பின்வருமாறு இருந்தது.

அன்பான மனைவிக்கு,

எனது கடிதம் உனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் இங்கே கணினியெல்லாம் கூட வைத்திருக் கிறார்கள். நமக்குப் பிரியமானவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அனுமதிக்கிறார்கள். நான் இங்கே நல்லபடியாக வந்து சேர்ந்தேன். இங்கே எல்லாம் தயாரான நிலையில் உள்ளது. நாளையே நீ இங்கே வந்துவிடலாம். உனது வரவை வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு

**உன் அன்புக் கணவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றி......

செல்பேசியில் செய்தி அனுப்ப இன்று பெரும்பாலானோர் பயன்படுத்தும் செயலி என்றால் அது Whats App தான். 2009 இல் தொடங்கப்பட்ட இந்த செயலி இன்று உலகம் முழுவதிலும் அதிகம் பிரபலமாக இருக்கின்றது. WhatsApp குறித்து பல அம்சங்களை இதுவரை படித்திருப்பீர்கள். இங்கு நீங்கள் இதுவரை அறிந்திராத சில தகவல்களைத் தான் பார்க்க இருக்கின்றீர்கள்.

WhatsApp செயலியின் மதிப்பு உலகின் பிரபலம் வாய்ந்த அமெரிக்கன் ஏர்லைன்ஸ், மற்றும் ஹார்லி டேவிட்சன் நிறுவனங்களை விட அதிகமாகும்.

WhatsApp செயலியின் இணை நிறுவனர் ஜான் கோம் ( Jan Koum ) உக்ரைன் நாட்டில் இருந்து அமெரிக்காவிற்கு 16 வயதில் குடியேறினார்.

WhatsApp ஜமாய்க்கா, ஐஸ்லாந்து மற்றும் வட கொரியா நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியை விட அதிகம் மதிப்பிடப்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் 100 கோடி பேர் WhatsApp செயலியை பயன்படுத்துகின்றனர்.

WhatsApp நிறுவனத்தில் மொத்தமாக 55 பேர்தான் பணியாற்றுகின்றனர், ஆனால் அவர்கள் அனைவரும் கோடீஸ்வரர்கள்.

இதன் நிறுவுனர்கள் Brian Acton மற்றும் Jan Koum இருவரும் முன்னர் Yahoo நிறுவனத்தில் வேலை செய்தவர்கள்.

WhatsApp இல் உலகம் முழுவதிலும் நாள் ஒன்றைக்கு 10 லட்சம் பேர் புதிதாக இணைகின்றனர்.

நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 2500 கோடி புகைப் படங்கள் WhatsApp செயலியில் பகிர்ந்து கொள்ளப் படுகின்றன.

WhatsApp செயலியின் மதிப்பு நாசாவின் ஆண்டு பட்ஜெட்டான 17 பில்லியன் டொலர்களை விட அதிகமாகும்.

WhatsApp செயலியின் நிறுவுனர்களான Brian Acton மற்றும் Jan Koum இருவருக்கும் Twitter மற்றும் Facebook நிறுவனங்கள் பணியில் சேர்த்து கொள்ள மறுத்து விட்டன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் "என்னுடையைக் கணினி அடிக்கடி ஏதாவது மென்பொருள் பிரச்சனை கொடுக்கிறது. dll Error அல்லது Application error என்று ஏதாவது பிரச்சனை வந்து கொண்டு இருக்கிறது. அதோடு, கணினி மிகவும் மெதுவாக வேலை செய்கிறது" என்று கூறக் கேட்டு இருப்பீர்கள்.

ஏன்! நீங்களே இது போலப் புலம்பிக் கொண்டு இருக்கலாம். இதற்கெல்லாம் காரணம் கணினியை சரியாகப் பராமரிக்காததுதான். "இலவசம்" என்றால் அதனால் நமக்குப் பயன் இருக்கிறதோ இல்லையோ அதைப் பெற வேண்டும் என்ற எண்ணம் பலரிடையே இருக்கிறது. முதலில் அனைவரும் ஒன்றை தெளி வாகப் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் இலவசம் என்று எதுவுமில்லை. இலவசம் என்றால், அதைக் கொடுப்பவருக்கு அதனால் நேரடியாகவோ மறை முகவோ பலன் இருந்தே ஆக வேண்டும். இது புரியா மல் பலர் இலவசம் என்ற வார்த்தையில் ஏமாந்து போகிறார்கள்.



# கணினியைப் பராமரிப்பது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குப் பாதிப்பில்லாத பலன் என்றால் பிரச்சனை ஆனால், நமக்குப் பிரச்சனையைக் கொடுத்து அதனால் அவர்களுக்குப் பலன் என்றால்… யோசிக்க வேண்டும் அல்லவா! இது பற்றி விரிவாகப் பார்ப்போம்.

இலவசமாகக் கிடைக்கும் மென்பொருட்களால் நம் முடைய கணினி கெட்டுப் போவதோடல்லாமல், வேகமும் பெருமளவு குறைந்துவிடும். நாம் இலவசமாகக் கிடைக்கும் மென்பொருளை எதற்கு நிறுவுகிறோம்? அதில் உள்ள சில தொழில்நுட்பம் நமக்குத் தேவைப் படுகிறது என்பதற்காகத் தானே!

உதாரணத்திற்கு ஒரு காணொளியை பாதியாக வெட்ட, YouTubeல் இருந்து காணொளியை தரவிறக்கம் செய்ய, கணினியின் வேகத்தைக்கூட்ட, கணினியைப் பராமரிக்க, MP3 யை வெட்ட இது போல நிறையக் கூறிக் கொண்டே செல்லலாம்.

நான் எது பற்றிக் கூறுகிறேன் என்று இந்நேரம் இதைச் செய்துகொண்டு இருப்பவர்களுக்குப் புரிந்து இருக்கும். எனவே மேலும் உதாரணங்கள் தேவையில்லை. இவற்றைத்தான் Third Party Software என்று குறிப்பிடு வார்கள்.

இது போல மென்பொருட்களை நிறுவும் போது அதிலும் ஒரு குட்டி இலவச இணைப்பாக Toolbar என்ற தேவை யில்லாத ஒரு மென்பொருளும் சேர்த்து வரும். இதை நாம் நிறுவக்கூடாது. ஆனால், இதையும் பலர் நிறுவி வைத்துக் கொள்வார்கள்.

இது நம்முடைய உலவியின் [Browser] வேகத்தைக் குறைத்து விடும். அதோடு உலவியைத் திறந்தாலே முக்கி முணகித்தான் திறக்கும். இதற்குக் காரணம் இந்த Toolbar மென்பொருளே! உங்கள் உலவியைத் திறந்தால் திடீர் என்று உங்களுக்கு சம்பந்தமே இல்லாத தளத்தின் முகவரி Home Page ஆக இருக்கும். நீங்கள் என்ன செய்தாலும், அமைப்பு [settings]மாற்றினாலும் கூடப்போகாது.

பின்னர் இதற்கென்று உள்ள Adware மென்பொருளை நிறுவி நீக்க வேண்டும் அல்லது Registry யில் எல்லாம் கை வைக்க வேண்டியதாக இருக்கும். இதெல்லாம் கண்ட மென்பொருளை நிறுவுவதாலும், ஆபாசத் தளங்கள் போவதாலும் அங்கு இருந்து ஒட்டிக்கொள் வதாகும்.

இணையத்தில் உலவுபவர்கள் Registry cleaner, System booster, System Maintenance, Computer Doctor போன்ற கவர்ந்திழுக்கும் மென்பொருட்களின் விளம்பரங்களைக் காணாமல் இருக்கவே முடியாது. நம் கண் முன்னே வந்து மின்னிக்கொண்டு இருக்கும். ஆகா! இதை நிறுவினால் நம்ம கணினியை வேகமாக் கலாம், பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கத் தோன்றும். இதில் ஏமாறாமல் தப்பித்த வர்கள் குறைவு. தங்கள் இணைய வாழ்க்கையில் ஒருமுறையாவது ஏமாந்து இருப்பார்கள். இதில் நானும் ஒரு காலத்தில் ஏமாந்து இருக்கிறேன் ஆனால், உடனே சுதாரித்து விட்டேன்.

இந்த மென்பொருட்கள் நம் கணினியை குப்பை ஆக்கு வதோடு கணினியின் வேகத்தை மிகவும் மெதுவாக்கி விடும். நமக்கு என்ன காரணம் என்றே தெரியாமல், ஏன் நம் கணினி இவ்வளவு மெதுவாக இருக்கிறது? எதனால் இத்தனை Error வருகிறது? என்று குழம்பிக் கொண்டு இருப்போம். பிரச்சனையே நாம் தான் என்பதை அறியாமல்.

இது போதாது என்று இவைகள் நம் தகவல்களைத் திருடி அனுப்பும் Malware களாகவும் இருக்கலாம். கணினியின் வேகத்தைக் குறைத்தால் கூடப் பரவா யில்லை, நம் தகவல்களைத் திருடிவிட்டால்! எனவே, சீரான இடைவெளியில் நம்மையும் அறியாமல் ஏதாவது மென்பொருள் நிறுவப்பட்டுள்ளதா என்று சோதித்துப் பார்ப்பது நல்லது.

இலவசமாகக் கிடைக்கும் அனைத்துமே பிரச்சனை யைத்தரும் என்று எண்ண வேண்டியதில்லை. பிரபலமான நிறுவனங்களின் மென்பொருள்களைச் சோதித்து நமக்குத் திருப்தி ஏற்பட்ட பிறகு தொடர்ந்து பயன்படுத்தலாம்.

உதாரணத்திற்கு Google Chrome Browser, Firefox Browser, Safari Browser, iTunes, Skype,Dropbox, Java, VLC Media Player, Ccleaner, 7Zip, Win SCP போன்றவை. இவை சிறு உதாரணம் தான். இது போல Branded Software இலவசமாகப் பயன்படுத்தினால் நமக்குப் பிரச்சனையில்லை.

இதிலும் நமக்கு உண்மையாகவே தேவை என்று இருப்பவைகளையே நிறுவ வேண்டும், அவசிய மில்லை என்றால், தவிர்க்க வேண்டும். இவற்றை நிறுவும் போதும் (Java போன்றவை) நம்மை Toolbar நிறுவக் கேட்கும். அதில் நாம் அதைத் தேர்வு செய்யாமல் விட்டுவிட வேண்டும்.

தற்போது பெரும்பாலான வேலைகளை Online லையே செய்ய முடிகிறது. எனவே இதற்காக மென்பொருள் நிறுவ வேண்டிய அவசியமில்லை. உதாரணமாக YouTube காணொளியை தரவிறக்கம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றால் இதற்காக மென்பொருள் நிறுவ வேண்டிய அவசியமில்லை, இணையத்தில் இருந்தே தரவிறக்கம் செய்ய முடியும்.

அப்படியும் சில மென்பொருளை தவிர்க்க முடியாமல் நிறுவ வேண்டி நேர்ந்தால், நம் வேலை முடிந்த பிறகு அதை உடனடியாக நீக்கி விட வேண்டும்.

இரண்டு வாரத்திற்கு ஒருமுறை CCleaner போன்ற மென்பொருளைப் பயன்படுத்தி Temporary file களை நீக்கி விட வேண்டும். இதன் மூலம் அவசியமற்ற குப்பைகள் இருக்காது, பாதுகாப்பாகவும் இருக்கும். ஆறு மாதத்திற்கு ஒருமுறை உங்கள் இயங்கு தளத்தை Reinstall செய்வது நல்லது.

எதற்கு என்றால், நம்மையும் அறியாமல் சில மென் பொருள்கள் திருட்டு வேலை செய்து கொண்டு இருக்க லாம். எனவே, அதற்கு ஒரே வழி OS Reinstallation தான். இது கணினியின் வேகத்தையும் கூட்டும் எனவே, இதை வருடத்திற்கு இரண்டு முறை செய்வது நல்லதே! அவசியம் Antivirus மென்பொருளை நிறுவி இருக்க வேண்டும்.

நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு Third Party மென் பொருள்களைத் தவிர்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ் வளவு உங்கள் கணினி சிறப்பாக வேலை செய்யும். Registry Cleaner, System Booster, System Maintenancem, Computer Doctor போன்ற மென்பொருட்களை மறந்தும் நிறுவாதீர்கள்.

மிக மிக அவசியமான மென்பொருள்களை மட்டும் வைத்துக்கொண்டு மற்றதை நீக்கி விட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் நீங்க புடுங்குவது எல்லாமே தேவையில்லாத ஆணி தான்.

மேற்கூறியவற்றைப் பின்பற்றினால் உங்கள் கணினி நிச்சயம் எந்தப் பிரச்சனையும் செய்யாமல் (Hardware பிரச்சனை தவிர்த்து) சிறப்பாக வேலை செய்யும். நீங்களும் கவலையில்லாமல் இருக்கலாம்.

## கொசுறு

உங்கள் கணினி நாளடைவில் வேகம் குறைவதற்கு உங்களுடைய Hard disk ம் ஒரு காரணமாக இருக் கலாம். நம்முடைய Hard disk இல் உள்ள சாதனங்கள் நாளடைவில் அதனுடைய திறனை இழந்து விடுவதும், உங்கள் கணினியின் வேகம் குறைவதற்கு முக்கியக் காரணம்.

எனவே, மடிக்கணினி பயன்படுத்துபவர்கள் அடுத்த முறை வாங்கும் போது SSD என்று கூறப்படும் Solid State Drive வாங்கலாம். ஆனால், விலை அதிகம். இது பற்றி விரிவாக இன்னொரு கட்டுரையில் விளக்குகிறேன். இனி எதிர்காலம் SSD தான்.

கம்ப்யூட்டர் டுடே
கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

உங்களின் அபிமான கம்ப்யூட்டர் டுடே யும்
வடமாகாண கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தும்

மாபெரும் தகவல் தொழில்நுட்ப போட்டிகள்!

- நாட்டின் எப்பகுதியில் இருந்தும் பங்குபற்றலாம்.
- மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கான தனித்தனி போட்டிகள்
- பரிசில்கள் மற்றும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள்.




முழுமையான விபரம்
ஜூன் மாத கம்ப்யூட்டர் டுடே யில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலையோடி பதில்கள்

## மதுரன், கோண்டாவில்.

**கேள்வி:** கணினியில் நிறுவிய நிரல்களை, முழுமையாக நீக்க என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** சில நிரல்களில், அதனை நீக்குவதற்கான வழிகளையும் தந்திருப்பார்கள். அப்படி யில்லையெனின் Control Panel --- All Control Panel Items --- Programs and Features இல் நீங்கள் நீக்குவதற்கு விரும்பும் நிரலை தெரிவு செய்தால், Uninstall என்று ஒரு வசதி கிடைக்கும். அதில் சொடுக்கி நீங்கள் நீக்கவிரும்பும் நிரலை நீக்கிக்கொள்ளலாம்.

இந்த முறையில் முழுமையாக அந்த நிரல் முழுமையாக நீக்கப்படும் எனச் சொல்ல முடியாது.

அப்படி அவசியம் ஏற்படின் Third Party மென்பொருள்களின் உதவியை நாடலாம். ஆனால் அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## ராகவிகா, நெல்லியடி

**கேள்வி:** வீட்டுக் கணினியில், MS Office 2007 நிரல் Windows 7 இயங்குதளத்தில் பயன்படுத்துகிறேன். இதில் PDF கோப்புக்களைத் தயாரிக்க முடியவில்லை. ஆனால் என் அலுவலகக் கணினியில் தயாரிக்கமுடிகிறது. ஏன்? இதனைக் கொண்டுவர என்ன செய்திடல் வேண்டும்?

**பதில்:** கவலைப்படவேண்டாம். வீட்டில் உள்ள Office தொகுப்பில் PDF கோப்பு உரு வாக்கும் வசதி அமைக்கப்படவில்லை எனத் தெரிகிறது. அதற்கான Add In தொகுப்பு சேர்க்கப்படாமல் இருக்கலாம். இதனைக் கொண்டு வர, உங்களுக்குத் தேவையானது 2007 Microsoft Office Addin: Microsoft Save as PDF or XPS என்கிற Add In தொகுப்பு. இதனை Microsoft இணையத் தளத்திலிருந்தே பெற்றுக் கொண்டு நிறுவிக்கொள்ளவும். அந்த Microsoft தளம் சென்று, Add In தொகுப்பு பெயர் கொடுத்துத் தேடிப் பெறவும். இதற்கு நீங்கள் கட்டணம் செலுத்திய Office தொகுப்பினைப் வைத்திருத்தல் வேண்டும். Windows 7 தொகுப்பும், நகல் தொகுப்பாக இருக்கக் கூடாது.

## வரகுணன், மீசாலை

**கேள்வி:** தொழில்நுட்ப ரீதியாக மட்டுமின்றி, பல வேளைகளில், சாதாரணமான இரண்டு விஷயங்களுக்கிடையேயுள்ள வேறு பாடு சட்டெனத் தெரிவதில்லை. எடுத்துக் காட்டாக, GSM. மற்றும் CDMA. இந்த சூழ்நிலைகளில் நமக்கு உதவிடும் இணைய தளங்கள் ஏதேனும் உண்டா?

**பதில்:** உங்கள் தேவையை மனதில் கொண்டு இணையத்தில் உலா வந்த போது, மிகவும் ஆச்சரியமாக உங்கள் சந்தே கத்தின் பெயரிலேயே ஒரு தளம் இயங் குவது தெரிய வந்தது. இதன் பெயர் differencebetween.com

இந்த தளம் சென்றவுடன், உங்களுக்கு விளக்கம் தேவைப்படும் பொருள் எந்த பிரிவில் உள்ளதோ, அந்த தலைப்பில் சொடுக்கி, பின்னர் கிடைக்கும் Menu இல் சென்று பெறலாம். இங்கு தொழில்நுட்பம் மட்டுமல்லாமல் பல பிரிவுகள்உள்ளன. இதன் சிறப்பு, உங்களுக்கு நன்கு தெரிந்த இரண்டு விஷயங்களுக்கிடையேயான வேறுபாடு குறித்து நீங்களும் உங்கள் குறிப்புகளை இதில் பதிவேற்றம் செய்திட லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரியுமா உங்களுக்கு ?

- சீபீயூ (CPU ) வின் வேகம் எந்த அலகினால் அளவிடப்படும் ?

  Mhz அல்லது Ghz

- பிரதான நினைவகமான RAM இல் தரவு எவ்வாறு தேக்கி வைக்கப்படும்?

  தற்காலிகமாக

- RAM என்பதன் விரிவாக்கம் என்ன ?

  Random Access Memory

- நினைவகத்தின் கொள்ளளவு எதனால் அளவிடப்படும் ?

  MB அல்லது GB

- கட்டுப்பாடுப் பகுதி (Control Unit) எண் கணித மற்றும் தர்க்கச் செயற்பாட்டுக்கான பகுதி (Arithmetic & Logical Unit ) என்பன எதில் அடங்கியுள்ளது ?

  CPU இல்

- பொதுவாகப் பாவனையிலுள்ள இரண்டு உள்ளிடும் சாதனங்கள் எவை ?

  சுட்டி, விசைப்பலகை

- Pointing Device உதாரணம் ஒன்று தருக ?

  சுட்டி

- கையடக்கக் கணினிகளில் உள்ளிடும் சாதனமாக பயன்படுத்தப்படுவன எவை ?

  Light Pen, Stylus, Touch Screen

- தொடு திரை (Touch Screen) என்பதும் எவ்வகையான சாதனம்?

  உள்ளிடும் (input)

- Bar Code எனப்படும் பட்டைக் கோடுகளிலுள்ள விவரங்களை வாசித்தறிய உபயோகிக்கப்படும் சாதனத்தின் பெயர் என்ன ?

  Barcode Reader

- Barcode Reader, Scanner போன்ற ஒளியியல் உள்ளிடும் சாதனங்களை எவ்வாறு அழைப்பர்?

  Optical Input Device

- ஆவணங்களை scan செய்து திருத்தக்கூடிய ஆவணமாக மாற்ற OCR தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். OCR என்பதன் விரிவாக்கம் என்ன ?

  Optical Character Recognition

- கணினிக்கு ஒலியை உள்ளீடு செய்ய பயன்படுத்தப்படும் பிரதான சாதனம் என்ன?

  ஒலிவாங்கி (Microphone)

- இணையத்தில் வீடியோ உரையாடலில் ஈடுபட (Video Conferencing) செய்ய தேவைப்படும் கருவியின் பெயர் யாது ?

  Web Cam

- வெளியிடும் சாதனங்களுக்கு சிலவற்றின் பெயரைத் தருக ?

  Monitor, Printer

**வாசகர்களே !**

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களுக்கு "வலையோடி" பதில் தரக் காத்திருக்கிறார்.
கேள்விகள் அனுப்ப வேண்டியது:

**"வலையோடி"**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி : 021 5 677 600**
info@computertoday.lk

**கம்ப்யூட்டர் ருடே**
**சஞ்சிகையின்**
**மாதாந்த ஒன்றுகூடல்**


காலம் : 15.05.2015
நேரம் : மாலை 05.00
இடம் : **New Gateway, Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Galaxy S6

அதிகம் எதிர்பார்க்கப்பட்ட சாம்சங் நிறுவனத்தின் Galaxy S6 விற்பனை அமோகமாக நடைபெற்று வரும் நிலையில் நீங்களும் சாம்சங் Galaxy S6 வாங்கி இருக்கின்றீர்களா? சாம்சங் Galaxy S6 குறித்து உங்களுக்கு தெரிந்திராத சில வியப்பூட்டும் தகவல்களை பாருங்கள்...




| | | |
|---|---|---|
| NETWORK | Technology | GSM / HSPA / LTE |
| LAUNCH; | Announced | 2015, March |
| | Status | Available. Released 2015, April |
| BODY | Dimensions | 143.4 x 70.5 x 6.8 mm (5.65 x 2.78 x 0.27 in) |
| | Weight | 138 g (4.87 oz) |
| | Build | Corning Gorilla Glass 4 back panel |
| | SIM | Nano-SIM |
| | | - Fingerprint sensor (PayPal certified)<br>- Samsung Pay (Visa, MasterCard certified) |
| DISPLAY | Type | Super AMOLED capacitive touchscreen, 16M colors |
| | Size | 5.1 inches (~70.7% screen-to-body ratio) |
| | Resolution | 1440 x 2560 pixels (~577 ppi pixel density) |
| | Multitouch | Yes |
| | Protection | Corning Gorilla Glass 4 |
| | | - TouchWiz UI |
| PLATFORM | OS | Android OS, v5.0.2 (Lollipop) |
| | Chipset | Exynos 7420 |
| | CPU | Quad-core 1.5 GHz Cortex-A53 & Quad-core 2.1 GHz Cortex-A57 |
| | GPU | Mali-T760MP8 |
| MEMORY | Card slot | No |
| | Internal | 32/64/128 GB, 3 GB RAM |
| CAMERA | Primary | 16 MP, 2988 x 5312 pixels, optical image stabilization, autofocus, LED flash, check quality |
| | Features | Geo-tagging, touch focus, face detection, Auto HDR, panorama |
| | Video | 2160p@30fps, 1080p@60fps, 720p@120fps, HDR, dual-video rec., check quality |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | Secondary | 5 MP, 1440p@30fps, dual video call, Auto HDR |
| SOUND | Alert types | Vibration; MP3, WAV ringtones |
| | Loudspeaker | Yes |
| | 3.5mm jack | Yes |
| SOUND | Alert types | Vibration; MP3, WAV ringtones |
| | Loudspeaker | Yes |
| | 3.5mm jack | Yes |
| COMMS | WLAN | Wi-Fi 802.11 a/b/g/n/ac, dual-band, Wi-Fi Direct, hotspot |
| | Bluetooth | v4.1, A2DP, LE, apt-X |
| | GPS | Yes, with A-GPS, GLONASS, Beidou |
| | NFC | Yes |
| | Infrared port | Yes |
| | Radio | No |
| | USB | microUSB v2.0, USB h;ost |
| FEATURES | Sensors | Accelerometer, gyro, proximity, compass, barometer, heart rate, SpO2 |
| | Messaging | SMS(threaded view), MMS, Email, Push Mail, IM |
| | Browser | HTML5 |
| | Java | No |
| | | - Wireless charging (Qi/PMA) - market dependent<br>- ANT+ support<br>- S-Voice natural language commands and dictation<br>- Smart stay<br>- OneDrive (115 GB cloud storage)<br>- Active noise cancellation with dedicated mic<br>- MP4/DivX/XviD/WMV/h;.264 player<br>- MP3/WAV/WMA/eAAC+/FLAC player<br>- Photo/video editor<br>- Document editor |
| BATTERY | | Non-removable Li-Ion 2550 mAh battery |
| | Colors | White Pearl, Black Sapphire, Gold Platinum, Blue Topaz |

- சாம்சங் நிறுவனம் புதிய ஸ்மார்ட்போனில் வித்தியாசமான வடிவமைப்பை வழங்கியுள்ளது.
- எக்சைனோஸ் 7 ஒக்டா கோர் புரோசசர், 2.1 GHz மற்றும் 1.5 GHz கொண்டிருப்பதோடு 3GB RAM வழங்கப்பட்டுள்ளது.
- ஒப்டிகல் இமேஜ் ஸ்டபிலைசேஷன் கொண்ட 16 MP பிரதான Camera மற்றும் 5MP முன்பக்க Camera இருப்பதோடு பல அம்சங்களும் வழங்கப்பட்டுள்ளது.
- மேம்படுத்தப்பட்ட அன்ட்ராயிட் 5.0 லொலிப் மூலம் Galaxy S6 இயங்குகின்றது.
- இந்த ஸ்மார்ட்போனில் கூடுதல் மெமரி ஸ்லாட்கள் வழங்கப்படவில்லை, மாறாக 32GB உள்ளக நினைவகொள்ளவு மட்டும் தான் இருக்கின்றது.
- புதிய Galaxy S6 ஸ்மார்ட்போனில் வயர்லெஸ் சார்ஜிங் அம்சம் அனைவரையும் கவரும் என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது.
- சாம்சங் கருவிகளில் Waterpoof வசதி இருப்பது அனைவரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கணினியில் பயன்படுத்தும் RAM (Random Access Memory) என்பதின் பயன் என்ன?

கணினியின் முக்கிய பயன்பாடுகளில் ஒன்று பெருமளவிலான தகவல்களை சேமித்து வைத்துக் கொள்ளும் வசதி. இவ்வாறாக சேமிக்கப்படும் தகவல் கிடங்கில் இருந்து எந்த ஒரு குறிப்பிட்ட தகவலையும் நொடிப்பொழுதில் எடுத்துவிட கணினி உதவுகிறது. இவ்வாறாக தகவலை சேமித்துவைப்பதற்காக, கணினி களில் இரண்டுவகையான நினைவகங்கள் உள்ளன. அவை

1. தற்காலிக நினைவகம் – Temporary Memory area

2. நிலையான நினைவகம் – Permanent Memory area என்று அழைக்கப்படுகின்றன

இவற்றில் நிலையான சேமிப்பு கருவிகளாக நாம் Hard Disk, Floppy Disk,CDROM போன்றவற்றைப் பயன்படுத்துகிறோம். இவற்றில் சேமிக்கப்படும் தகவல்களை எப்பொழுது வேண்டுமானாலும் பயன் படுத்திக்கொள்ளும் அளவிற்கு நிலையானவை.

கணினியில் நாம் எந்த ஒரு வேலையைச் செய்ய வேண்டுமென்றாலும் அவ்வேலையைச் செய் வதற்கு என ஒரு மென்பொருளைப் பயன்படுத்த வேண்டு மென்பது (அல்லது செயலியை) உங்களுக்குத் தெரியும். எடுத்துக்காட்டாக நான் ஒரு கடிதம் தயார் செய்ய வேண்டும் என்றால், என்னிடம் Ms-Word போன்ற மென்பொருளும், படம் வரைய Paint போன்ற மென்பொருள் என ஒவ்வொரு வேலைக்கும் ஒரு மென்பொருள் அவசியமாகிறது. இத்தகைய மென்பொருள்களும் நமது கணினியில் நிலையாக Hard Disk என்னும் சேமிப்புக்கருவியில் நிறுவி வைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நாம் வேண்டிய நேரத்திற்கு அவற்றை உபயோகிக்க முடியும்.

இத்தகைய மென்பொருள்கள் நாம் ஒரு கட்டளையை கணினிக்கு இட்டால் அது அவ்வேலையை எப்படிச் செய்யவேண்டும்என்ற தகவல்களைத்தந்து உதவு கிறது.

எடுத்துக்காட்டாக ஒரு கோப்பை நான் அழிக்க வேண்டும் என்றால் அதற்கான கட்டளையைக் கொடுத்தவுடன் கணினி அந்த கட்டளைக்கான தகவல் கள் எங்கிருக்கின்றன எனத் தேடிக் கண்டுபிடித்து அவற்றில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் படித்து அதன்பின் அதில் கூறப்பட்டுள்ளவாறு நடந்து அந்த கோப்பினை அழிக்கிறது. அதுபோல நான் எழுதியுள்ள ஒரு வரியை சிகப்பு நிறத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும் என்றாலும் நான் எந்த மென்பொருளை அப்பொழுது பயன்படுத்திக் கொண்டி ருக்கிறேனோ அந்த மென்பொருளில் இருந்து சிகப்பு நிறத்திற்கு ஒரு வரியை மாற்ற என்ன செய்யவேண்டும் என்பதைப் படித்து அவ்வாறு செய்து அதன் நிறத்தை மாற்றுகிறது. ஆக எந்த ஒரு கட்டளையானாலும் அந்த கட்டளைக்கான, அதை நிறைவேற்றுவதற்கான தகவல்கள் நமது கணினியில் மென்பொருளாக ஏற்றப்பட்டிருக்கவேண்டும்.

அவ்வாறு இல்லாத பட்சத்தில் தாங்கள் கொடுக்கும் கட்டளைக்கான தகவலைத்தேடிவிட்டு இது செல்லத் தக்க கட்டளை இல்லை என்று கூறிவிடும்.

பொதுவாக இத்தகைய மென்பொருள்களைக் Hard Disk என்னும் சேமிப்பு கருவியில் தான் சேமித்து வைக்கிறோம். நாம் தரும் ஒவ்வொரு கட்டளைக்கும் கணினி தேவையான தகவல்களை Hard disk இல் இருந்து எடுத்துக்கொண்டிருக்க முடியாது அவ்வாறாக அது ஒவ்வொரு கட்டளைக்கும் Hard diskஐப் பயன் படுத்தி அதனுள் இருந்து அந்த கட்டளைக்கு என்ன செய்யவேண்டும் என்ற தகவலை எடுத்து அதன்படி நடக்க வேண்டும் என்றால் இது மிக அதிக நேரம் எடுத்துகொள்ளக் கூடியது. ஏனெனில் Hard disk ல் தட்டுகளில் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன அவற்றை எடுப்பதற்கு அந்த தட்டுகள் சுற்றப்பட்டு அதில் சரியான தகவல் சேமிக்கப்பட்டுள்ள பகுதியில் சென்று தகவலை எடுத்துத்தர கூடுதல் நேரம் எடுத்துக்கொள்ளும் கணினியும் மிகமெதுவாகவே செயல்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிரமங்களைத் தவிர்த்தல் பொருட்டு நாம் எந்தெந்த மென்பொருள்களைப் பயன்படுத் திக்கொண்டிருக்கிறோமோ அந்த மென்பொருள் மொத் தத்தையும் வேறு ஒரு மின்னணு பதிவுக் கருவிக்கு தற்காலிகமாக சேமித்து வைத்துக் கொண்டு எப்பொழுதெல்லாம் தகவல் தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் கணினி அந்த மின்னணுக் கருவியிலிருந்து எடுத்துப் பயன்படுத்திக்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது. அத்தகைய மின்னணுக்கருவி நமது கணினியின் Micro processor களின் வேகத் துக்கு ஈடுகொடுத்து தன்னுள் சேமிக்கப்பட்டுள்ள தகவல் களைத் தரவல்லவை. இக்கருவியே (ரம்) RAM என்று அழைக்கப்படுவதாகும்.

இந்த வகைச் சேமிப்பு கருவிகள் மின்சார இணைப்பு இருக்கும் வரைக்கும் இயங்கும், மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டால் அதில் சேமிக்கப்பட்டுள்ள தகவல்கள் அழிந்துபோய்விடும் அதனால் தான் இதனை தற்காலிக சேமிப்பு பகுதி என்று கூறுகிறோம்.

பொதுவாகவே எந்த ஒரு மென்பொருளையும் நீங்கள் இயக்கினால் சில மணித்துளிகள் கழித்தே அவை இயங்க ஆரம்பிக்கும் அக்கால இடைவெளியில் கணினியில் நாம் இயக்கும் மென்பொருளின் அனைத்து வேண்டிய தகவல்களும் (ரம்) RAM என்னும் இடத் திற்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. அதன்பிறகு எந்த ஒரு கட்டளையை நீங்கள் இட்டாலும் அது உடனே அதனை நிறைவேற்றுவதைப் பார்க்கமுடியும். (நீங்கள் Ms-word, excel போன்ற மென்பொருளை இயக்கிப் பாருங்கள்).

அடுத்து அந்த மென்பொருளை விட்டு வெளியேறும் பொழுது அந்த மென்பொருள் சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் RAM நினைவில் இருந்து அகற்றப்பட்டு வேறு ஏதாவது செயலிக்குள் நுழைந்தால் அவை உடனே அதில் ஏற்றப்படும்.

இத்தகைய RAM நினைவகத்தின் கொள்ளளவு Byte என்னும் அளவீட்டால் குறிக்கப்படுகிறது இது ஒரு Byte இடத்தில் ஒரு எழுத்தை நாம் சேமிக்க முடியும்.


1024 Byte கள் சேர்ந்து அது – 1 kilo byte (KB)

1024 KB கள் சேர்ந்து அது – 1 Mega byte (MB) என்றும் அழைக்கப்படுகின்றன.

1024 MB கள் சேர்ந்து 1GB ஆகும்.

# facebook feeling fat நீக்கம்

Facebook நிறுவனம், அதன் நிலைத்தவலிருந்து 'feeling fat' உணர்ச்சித்திரத்தை நீக்கியது. சாப்பிடுவதில் குறைபாடு ஏற்பட்டதால் உடல் பருமன் அதிகரித்த மக்கள் இது உணர்வற்றதாக உள்ளது என்று புகார் அளித்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதனால் Facebook நிறுவனம் 'feeling fat' உணர்ச்சித்திரத்தை நீக்கியது.




சிறுமிகள் மற்றும் பெண்களின் உடல் பருமனை கேலி செய்பவர்களை எதிர்த்துப் போராடும் வகையில், கேதரின் வெயின்கார்ட்டனும் மற்றும் என்டேஞ்சர்டு பாடீஸ் குழுவின் மூலம் அமைக்கப்பட்ட change.org இல் 16,000க்கும் மேற்பட்ட மக்கள் 'feeling fat' Emoji இக்கு எதிராக இணையத்தில் கையெழுத்திட்டுள்ளனர். குழு தொடர்புடைய ஆர்வலர்கள், கடந்த மாதம் தொடங்கப்பட்ட Change.org இல் பிரச்சாரத்தில் வந்த பல்வேறு குறைகளை தேசிய உணவு சீர்கேடுகள் விழிப்புணர்வு வாரத்தில் இணைத்தனர்.

இந்த Emoji, உடல் பருமன் அதிகம் உடையவர்களை கேலி செய்யும் வகையிலும், அவர்களது மனதை புண்படுத்தும் வகையில் உள்ளதாக பிரச்சாரத்தின் முடிவில் அறிந்தோம் என்று Facebook செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். அதனால் Facebook உணர்வுகள் பட்டியலில் இருந்து 'feeling fat' Emoji ஐ நீக்க உள்ளோம் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அதை தொடர்ந்து Facebook உணர்வுகள் பட்டியலிலிருந்து 'feeling fat' உணர்ச்சித்திரம் நீக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில் கேட்ஸ் சென்னையில் பிறந்திருந்தால்...!!!

– ஒரு கற்பனை

விண்டோசை ஜன்னல் என்றுஅழைத்திருப்பார்கள். அதன் மெனு அட்டவணை இவ்வாறாக அமைந்திருக்கும் .

Save = வெச்சிக்கோ

Save as = அய்ய! அப்டியெ வெச்சிக்கோ

Save All = அல்லாத்தியும் வச்சிக்கோ

Help = ஒதவு

Find = பாரு

Find Again = இன்னொரு தபா பாரு

Move = அப்பால போ

Mail = போஸ்ட்டு

Mailer = போஸ்ட்டு மேன்

Zoom = பெருசா காட்டு

Zoom Out = வெளில வந்து பெருசா காட்டு

Open = தெற நயினா

Close = பொத்திக்கோ

New = புச்சு

Old = பழ்சு

Replace = இத்த தூக்கி அத்ல போடு அத்த தூக்கி இத்ல போடு

Run = ஓடு நய்னா

Execute = கொல்லு

Print = போஸ்டர் போடு

Print Preview = பாத்து போஸ்டர் போடு

Cut = வெட்டு - குத்து

Copy = ஈயடிச்சான் காப்பி

Paste = ஒட்டு

Paste Special = நல்லா எச்சு தொட்டு ஒட்டு

Delete = கீச்சிடு

anti virus = மாமியா கொடுமை

View = லுக்கு உடு

Tools = ஸ்பானரு

Toolbar = ஸ்பானரு செட்டு

Spreadsheet = பெரிசிட்டு

Database = டப்பா

Exit = ஓடுறா டேய்

Compress = அமுக்கி போடு

Mouse = எலி

Click = போட்டு சாத்து

Double click = ரெண்டு தபா போட்டு சாத்து

Scrollbar = இங்க அங்க அலத்தடி

Pay Per View = துட்டுக்கு பயாஸ்கோப்பு

Next = அப்பால

Previous = முன்னாங்கட்டி

Trash bin = கூவம் ஆறு

Solitaire = மங்காத்தா

Drag & hold = நல்லா இஸ்து புடி

Do you want to delete selected item? = மேய்யாலுமே தூக்கிறவா?

Do you want to move selected item? = மெய்யாலுமே கடாசிடவா?

Do you want to save selected item? = மெய்யாலுமே வெச்சிக்கவா?

Abort, Retry, Ignore = இஸ்டம் இல்லாட்டி உட்டுடு

Yes, No, Cancel = இப்போ இன்னா சொல்லுற நீ?

General protection fault = காலி

Access denied = கை வச்ச... கீச்சுடுவேன்!


Unrecoverable error = படா பேஜார்பா

Operation illegal = பேமானி சாவு கிராக்கி கஸ்மாலம்

Windows 98 = இதாமெ ஜன்னல் தொன்னித்தி எட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணைய நடுநிலைமை
# (The Internet Neutrality)

கெ.சர்வேஸ்வரன்
Mozilla Representative
*கணினி விஞ்ஞானத் துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

எமது இன்றைய வாழ்வில் இணையம் மின்சாரத் திற்கும் குடிநீருக்கும் நிகரானதாகிவிட்டது. மின்சார மில்லாக் காலங்களில் எவ்வாறு மின்விசிறி, மின்னொளி, தொலைக்காட்சியில்லாமல் அந்தரிக்கிறோமோ, குடிநீர் அற்றிருக்கும்போது நாவறண்டு அல்லலடுகிறோமோ அவ்வாறே இன்று இணையத் தொடர்பறுந்த நிலையும் அதனால் வெகுவாகப் பாதிப்படைகிறோம். இதற்குக் காரணம் இன்று இணையத்தில் கிடைக்கும் சேவைகள். உதாரணமாக வலை (Web), Viber, Skype, சகாக் களுக்கிடையிலான கோப்புப் பரிமாற்றும் (Peer-to-peer file transfer) போன்ற மிகப் பிரபல்யமாகப் பயன்படுத்தப்படுகின்ற சேவைகளைக் குறிப்பிடலாம். இந்த இணையத்தில் இவ்வாறு பெறப்படுகின்ற சேவைகளைப் பெறுவதற்கு எல்லோருக்கும் சமவாய்ப்பு உள்ளது என்பதனை வலியுறுத்தும் சட்டமே இந்த இணைய நடுநிலைமை. கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதி 2015 இல் அமெரிக்காவின் ஐக்கிய தொடர்பாடல் ஆணைக்குழுவால் (FCC) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்திற்காக உலகலாவிய ரீதியில் எழுந்த ஒரு பாரிய ஆதரவு அலையினாலேயே இச்சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சட்டம் பற்றியும் அதன் முக்கியத் துவம் பற்றியும் ஓர் அறிமுகத்தை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இணையம், இணையச் சேவை வழங்குநர் (Internet Service Provider), இணையச் சேவைகள் (Internet Services)

உலகளாவிய வலையமைப்பே இணையம் எனச் சுருக்கமாகக் கொள்ளலாம். அதாவது, உலகத்தில் உள்ள வலையமைப்பு நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ள உலகளாவிய வலையமைப்பே இந்த இணையம். இந்த வலையமைப்பில் இணைந்து கொள்வதற்கு இரண்டு தேவைகள் உள்ளன, ஒன்று முகவரி (IP Address) மற்றது ஏற்கனவே உள்ள இந்த உலகளாவிய வலையமைப்புடனான இணைப்பு. பெரிய நிறுவனங்களுக்கே இவை இரண்டையும் அடைய முடியும், அதற்கான செலவு மிக அதிகம். இலங்கையைப் பொறுத்தவரையில் எமக்குத் தொலைபேசி இணைப்பை வழங்கும் அனைத்து நிறுவனங்களும் இவ்வாறு இணைந் துள்ளன. அத்தோடு பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்கல்வி நிலையங்களுக்கு இணையச் சேவையை வழங்கும் LEARN(Lanka Education and Research Network) போன்றனவும் இவ்வாறு இணைந்துள்ளது. இந்த நிறுவனங்கள் அனைத்திடமும் இணைப்பு இல்லா விடினும் அவை தமக்கான முகவரிகளைப் பெற்று ஏனைய நிறுவனங்களின் இணைப்பினைப் பகிர்ந்துகொள்கின்றன.

தனிநபர்களான எம்மால் இவ்வாறு செலவு செய்து உலகளாவிய வலையமைப்பில் இணைந்து கொள்ள முடியாததால் நாம் ஏற்கனவே இணைந்துள்ள இந்த நிறுவனங்களினூடாக, அவற்றிடமிருந்து எமக்கொரு முகவரியைப் பெற்று உலகளாவிய வலையமைப்பு அல்லது இணையத்துடன் இணைந்து கொள்கிறோம். இவ்வாறு இணையத்துடன் இணைந்துகொள்ளும் சேவையை வழங்குவதால் இந்நிறுவனங்களை நாம் இணையச் சேவை வழங்குனர் என்கிறோம். இந்நிறுவனங்கள் தாங்கள் பெற்றுள்ள இணைய முகவரிகளை, தமது இணைப்பை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள். இந்த இணையச் சேவை வழங்குனர் இல்லாமல் நாம் இணையத்தினை அடைய முடியாது.

இவ்வாறு இணையத்தூடு இணைந்து கொண்டதன் பின்னர் நாம் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய சேவைகள் ஏராளம். இவற்றையே நாம் இணையச் சேவைகள் என்கிறோம். உதாரணமாக நாம் பயன்படுத்தும் வலை, மின்னஞ்சல், இணையத்தினூடான பேச்சு மூலத் தொடர்பாடல், சகாக்களுக்கிடையிலான கோப்புப் பரிமாற்றம் என்று இச்சேவைகள் ஏராளம். இன்று இந்தச் சேவைகளிலே எமது அன்றாட வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியுள்ளதெனலாம். ஓரிரு நாட்களுக்கு இந்த இணைச் சேவைகள் முடக்கப்படுமாயின் அதன் விளைவை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

**இணைய நடுநிலைமையின் முக்கியத்துவம்**

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சேவைகள் அனைத்தும் எமது இணையச்சேவை வழங்குநர்களின் உதவியுடன் அவர்களின் இணைப்பினூடாகவே பெறப் படுகின்றன. அத்தோடு அவர்களால் சில குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரம் வேகமான இணையச் சேவையையும் மற்றவர்களுக்கு மெதுவான இணைச் சேவையையும் கூட வழங்க இயலும். நாம் எல்லோரும் வீதியால் போவதற்கு, அதனைப் பயன்படுத்துவதற்கு வரி செலுத்துகிறோம். வீதியில் நாம் எல்லோரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். வரி செலுத்திய பின்னரும், நீங்கள் சைக்கிளில் போவதற்கு ஒரு மேலதிக பணம், காரில் போவதற்கு இன்னொரு பணம் என அறவிட அனுமதிப்பீர்களா? வானில் வருபவர் மேலதிக பணம் செலுத்தி100 கிலோ மீற்றர் வேகத்திலும் நீங்கள் மேலதிக பணம் செலுத்தாததால் 10 கிலோமீற்றர் வேகத்தில்தான் செல்லலாம் என்று ஒருவர் சொன்னால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா? அதே போல்தான் இணையமும். நாங்கள் மாதாந்த கட்டணத்தைச் செலுத்திய ஒரு இணைப்பைப் பெற்றால் நாம் அந்த இணைப்பை எந்த தடங்கலும் இல்லாமல் பயன்படுத்தவேண்டும். இணைய இணைப்பைப் பெற்ற அனைவரும் சமமாக மதிக்கப்படவேண்டும். இன்னொருவர் கூடிய பணம் செலுத்துகிறார் என்பதற்காக எமது இணைப்புக்குத் தடங்கலளிப்பதையோ அல்லது இணைப்பை மெது வாக்குவதையோ நாம் ஏற்றுக்கொள்ளத் தயங்கு வோம். ஆனால், இவ்வாறான செயற்பாடுகள் பல நிகழ்ந்துள்ளன, நிகழ்ந்தும் வரலாம்.

உதாரணமாக பின்வரும் செயற்பாடுகள் இணையச் சேவை வழங்குனர்களால் செய்யப்பட்டுள்ளன.

- சகாக்களுடனான கோப்புப் பரிமாற்றங்களைக் கட்டுப்படுத்துதல்
- மறைகுறியாக்கப்பட்ட தொடர்பாடல்களை (Encrypted Communication) மட்டுப்படுத்துதல்
- Mobile hotspot பயன்படுத்துபவர்களிடமிருந்து மேலதிக பணம் அறவிடுதல்
- தமக்குப் போட்டியான சேவை வழங்குநர்களுக்கான அல்லது சேவை வழங்குனர்களின் தொடர்பாடலை மட்டுப்படுத்துதல்.
- சில நிறுவனங்கள் இணையச் சேவை நிறுவனங்களுக்கு மேலதிக பணம் செலுத்தி தமக்கான விரைவான தொடர்பாடலை இணையத்தில் பெற்றுக்கொள்ளல்
- இணையத்தளங்களுக்கான அணுகல்களைக் கட்டுப்படுத்துதல்
- பரிமாற்றப்படும் தகவல்களை வாசித்தல்

இந்நிலையில்தான் இவ்வருடம் பெப்ரவரி மாதம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட சட்டம் மிக முக்கியத் துவம் பெறுகிறது. தகவல் தொழில்நுட்பத்துறையில் அமெரிக்காவின் பங்கு மிக முக்கியமானதாகும். நாம் இணையத்தில் பயன்படுத்தும் நியமங்கள் (Standards), நெறிமுறைகள் (Protocols) என்பன பெரும்பாலும் அங்கேயே உருவாக்கம் பெற்றன. அத்தோடு இணைத்தின் ஆரம்ப இடமும் அமெரிக்காவே. இன்று நாம் பயன்படுத்தும் பெரும்பாலான சேவைகள் அங்கிருந்தே கிடைக்கின்றன. இக்காரணங்களால் இந்தச் சட்டம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் உலக நாடுகள் அனைத்திலிருந்தும் இணைய ஆர்வலர்கள், நிறுவனங்கள் என்பன இச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தன. இச்சட்டத்தை எதிர்ப்பவர்களும் உளர். நாம் இன்று அறிந்து வைத்திருக்கும் கணினி வலையமைப்போடு தொடர்புள்ள ஏறக்குறைய அனைத்து நிறுவனங்களுமே இச்சட்டத்தை எதிர்த்தன. இவற்றுடன் Google போன்ற பெரிய நிறுவனங்களும் சேர்ந்துகொண்டன. இதற்கு முக்கிய காரணம், இந்நிறுவனங்கள் தமது சேவையை விரைவாக வழங்குவதற்கு இணைய சேவை வழங்குனர்களுக்கு மேலதிக பணம் செலுத்தி வந்தமையும் காரணமாக இருக்கலாம். இவ்வாறு பல முன்னணி நிறுவனங்கள் இச்சட்டத்தை எதிர்த்தாலும், அமெரிக்க ஜனாதிபதி, வலையின் ஸ்தாபகர் (Inventor of the Web) மற்றும் இணையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர் எனப் பல தனிப்பட்ட முக்கியஸ்தர்களும் உலக நாடுகள் பலவற்றிலுமுள்ள கட்டற்ற திறந்தமூல மென்பொருள் நிறுவனங்கள் உட்பட சமூக இயக்கங்கள் பலவும் இச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தன. இவ்வாறு பல மட்டங்களினதும் கருத்துக்களை ஆராய்ந்த FCC, பெப்ரவரி 26ம் திகதி 2015 ஆம் ஆண்டு சட்டத்தை நிறைவேற்றியது.

LEARN Lanka Education and Research Network
*National Research and Education Network of Sri Lanka*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்தினால், அமெரிக்காவில் இனி இணையம் அனைவருக்கும் சமமானதாக இருக்கப்போகிறது. யாருடைய இணைய தொடர்பாடல்களையும் முடக்கமுடியாது, யாருக்கும் முக்கியத்துவம் அளிக்க இயலாது, யாரும் பணங் கொடுத்து தமது சேவைக்கு முக்கியத்துவத்தினைப் பெற்றுக்கொள்ள இயலாது. இது சுதந்திரமான பேச்சுக்கும் தொடர்பாடல்களுக்கும் வழிவகுக்கும். எந்த நிறுவனமும் தமக்கு எதிரான கருத்துக்களை முடக்க முடியாது. சுருங்கச் சொன்னால் இணையச் சுதந்திரம் கிடைத்துள்ளது.


இலங்கையைப் பொறுத்தவரையில் இந்த இணைய நடுநிலைமை தொடர்பான எவ்வகைய ான சட்டங்கள் உள்ளன என்ற விடயத்தினை என்னால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. இலங்கையில் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (The Telecommunication Regulatory Commission of Sri Lanka) என்ற அமைப்பு இயங்கி வருகிறது. இந்நிறுவனமே தொடர்பாடல் சம்பந்தமான விடயங்களைக் கவனித்து வருகிறது. அத்தோடு ஒலி-ஒளி பரப்பல், இணையம், இலத்திரனியல் சாதனங்களுக்கான கட்டுப்பாடு, இலத்திரனியல் சேவைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக நியதிச் சட்டங்கள் இயற்றுவதும் அவை தொடர்பாக கண்காணித்து அறிக்கைகள் விடுவதும் இந்நிறுவனத்தின் முக்கிய பணிகளாக உள்ளன. இன்று நாம் என்னென்ன வகையான கைத்தொலை பேசிகளைப் பயன்படுத்தலாம், யார் யார் தொலைபேசி சேவை வழங் குநராகத் தொழிற்படலாம் என்று தொடர்பாடல் சம்பந்தமான விடயங்களைக் கவனித்து வருவதோடு, இணையப் பயன்பாடு அவற்றின் வேகம் சம்பந்த மாகவும் ஆய்வு செய்து ஒவ்வொரு மாதமும் இலங்கையில் உள்ள இணையச் சேவை வழங்குநர்களின் சேவை களை ஒப்பிட்டு அறிக்கைகளையும் இந்நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. இந்நிறுவனம் இந்த இணைய நடுநிலைமை சம்பந்தமான சட்டங்கள் இயற்றுவதைப் பற்றி யோசிக்கலாம். அவ்வாறு சட்டங்கள் இயற்றப்பட்டால், இணைய நடுநிலைமை பேணப்படவேண்டுமாயின் அரசாங்கமும் எதனையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை உருவாகும். எனவே இவ்வகையான சட்டங்கள் இலங்கையில் நிறைவேறுமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இனி நாம் இணையச் சுதந்திரம் பற்றி சிந்திப்பதும் முக்கியம், எமது எதிர்காலம் அச்சுதந்திரத்திலும் தங்கியுள்ளது.

## Hard Disk ல் உள்ள பிழைகளை நீக்க இலவச மென்பொருள் - CheckDiskGUI 1.2.0

M.J.M. KATHAFI,
Software Engineer, Lecturer,
KANDY.
mjmkathafi79@yahoo.com





அதிக நாட்களாக பயன் படுத்தப்படும் Hard Disk ல் பலவிதமான கோளாறுகள் ஏற்பட்டு அதனால் பிழையான செய்தி காணப்படலாம்.

### Hard Disk ல் பிழையான செய்திகள் எதனால் ஏற்படுகின்றன?

Hard Disk ல் மென்பொருள்களை நிறுவி பயன்படுத்து போது தேவை இல்லையெனில் மென்பொருள்களை கணினியில் இருந்து நீக்கி விடுவோம். சில வேளை களில் நீக்கப்படும் மென்பொருளானது முழுமையாக நீங்காமல் சில File கள் கணினியிலேயே தங்கி விடும். அந்த File களால் கணினியில் அடிக்கடி பிழைச்செய்தி தோன்றலாம். இதுபோன்ற பிழைச் செய்திகளை சரிசெய்ய ஒரு மென்பொருள் உதவுகிறது.

இந்த மென்பொருளை உங்கள் கணனியில் நிறுவிக் கொள்ளவும். பின் இந்த அப்ளிகேஷனை திறந்து சோதனை செய்ய வேண்டிய Drive ல் தேர்வு செய்து, Read Only Button ஐ அழுத்தி சோதனை செய்து கொண்டு பிழை செய்தி இருப்பின் Fix Button ஐ அழுத்தவும். பிழைச் செய்திகளை நீக்க வேண்டுமாயின் Fix and Recover Button ஐ அழுத்தி இந்த பிழை செய்திகளை மீட்டுக்கொள்ள முடியும். பின் கணினியை மறு தொடக்கம் (Restart) செய்துகொள்ள வேண்டும்.


இந்த மென்பொருளானது முற்றிலும் இலவசமாகும். விண்டோஸ் 7 க்கு இது மிக சிறந்த மென்பொருளாகும்.

Link: http://wieldraaijer.nl/

Download File: CheckDiskGUI 1.2.0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அசத்தும் கூகுள் !

# கையால் குறுஞ்செய்தி எழுதி அனுப்பலாம்

நீங்கள் அன்ரொயிட் செல்பேசி வைத்திருப்பவர் என்றால் இனி குறுஞ்செய்திகளை தட்டச்சு செய்து தான் அனுப்ப வேண்டும் என்றில்லை. உங்கள் கையாலேயே எழுதி அனுப்பலாம் தெரியுமா? அதற்கான வசதியை கூகுள், Google Handwriting Input எனும் புதிய செயலி ( application) மூலம் அறிமுகம் செய்துள்ளது. தமிழ் உள்ளிட்ட 82 உலக மொழிகளில் இந்த வசதியை பயன்படுத்தலாம்.


Smart phone களில் என்னதான் நல்ல தட்டச்சுப் பலகைகள் வந்துவிட்டாலும் கூட, பலருக்கு தட்டச்சுவது என்றால் பாகற்காய்ச் சங்கதிதான். இன்னும் பலருக்கு என்ன இருந்தாலும் கையில் எழுதி அனுப்புவது போல வருமா? என்ற உணர்வும் இருக்கலாம். இந்த இரண்டு குறைகளையும் தீர்க்கும் வகையில் கூகுள், அன்ரொயிட் சாதனங்களுக்கான கைவிரலிலேயே எழுதி அனுப்பும் வசதியை அறிமுகம் செய்துள்ளது. கையால் எழுதப்படும் எழுத்துக்கள் Optical Character Recognition - OCR முறையில் புரிந்து கொள்வதன் அடிப்படையில் இந்த வசதி செயல்படுகிறது.

Google Handwriting Input செயலி மூலம், தொடு திரையில் கைவிரலால் பக்குவமாக எழுதலாம். அல்லது அட்டகாசமாகவும் எழுதலாம். உங்கள் கையெழுத்து கிறுக்கலாக இருக்கும் என்ற கவலையே வேண்டாம், இதில் எழுதிப்பாருங்கள் எந்த வகையான எழுத்துக்களையும் புரிந்து கொள்வோம் என கூகுள் சொல்கிறது.

எழுத்துக்கள் மட்டும் அல்ல, Emojis என சொல்லப்படும் சிறு படங்களைக்கூட இதில் வரைந்து காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு முறை தரவிறக்கம் செய்துவிட்டால் இணைய இணைப்பு இல்லாவிட்டாலும் பயன்படுத்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்ற குறுஞ்செய்திச் சேவைகளிலும் இதை பயன் படுத்தலாம். ஏற்கனவே கூகுள் மொழிபெயர்ப்பு வசதியில் இது போன்ற அம்சம் இருக்கிறது. அதை ஆய்வு மூலம் விரிவாக்கி இந்த வசதியை அன்ரொயிட் சாதனங்களுக்காக அறிமுகம் செய்துள்ளது கூகிள்.

இதில் பக்கம் பக்கமாக எழுத முடியாது, ஆனால் நச்சென்று நாலு வரிகள் எழுதி அனுப்பலாம். கூகுள் Play Store இல் இருந்து தரவிறக்கம் செய்து பயன்படுத்த வேண்டும்.

தரவிறக்கம் செய்ய:
https://play.google.com/store/apps/details?id=com.google.android.apps.handwriting.ime

இதை பயன்படுத்துவது தொடர்பான விரிவான விளக்கங்களுக்கு: https://support.google.com/faqs/faq/6188721



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - தரம் 10

**D.Shelton,**
IT Instructor,
Zonal Computer Resource Centre.
Jaffna.

நம் நாட்டில் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் பயனாக, தற்போது புதிய பாடத்திட்ட தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015இல் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரம் 10 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத் திட்டத்தினை நோக்கும்போது அவை அதிகளவான மாற்றத்திற்கு உள்ளாகவில்லை என்பது புலப்படும். பாடப் பரப்பின் சில உள்ளடக்கங்கள் சிறந்த முறையில் முன்வைப்புச் செய்யப்பட்டிருப்பதுடன், மாணவர்களின் அறிவுசார் சுமையை குறைக்கும் முகமாக சில பகுதிகள் நீக்கப்பட்டு எளிதாக்கப்பட்டும் உள்ளது. மேலும், இயக்க முறைமை மென்பொருளானது Linux இனை அடிப்படையாகக் கொண்டுள்ளமையும், பிரயோக மென்பொருள்கள் திறந்த மூலமான Open Office இற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டமையும் மாணவர்களின் சுய ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு ஏதுவாக அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும் எனலாம்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை யானது உலகம் முழுவதும் ஒரு அடிப்படைக் கருவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில், எமது பிரதேச பாடசாலைகளில் கீழ் நிலை வகுப்புகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகமானது ஆரம்ப கட்டத்தில் காணப்படுவது வெளிப்டை உண்மை. எமது பிரதேச மாணவர்கள் பல்வேறு கணினி நிலையங்களினூடாக மிகவும் அடிப் படையான, தினசரி கணினிப் பாவனைக்குரிய கற்கை நெறிகளையே பெரும்பாலும் விரும்பிக் கற்கின்றனர். நவீன வேலையுலகத்தில் பிரவேசிக்கவும், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் கல்வித் தகைமையில் எம்மை உயர்த்திக்கொள்ளவும், உயர்நிலையில் அங்கீகரிக்கப்பட்ட கணினிக்கற்கை நெறிகளை தொடர் வதற்கும் இது வழிவகுக்குமா என்பது சிந்தித்துப் பார்க்கப்படவேண்டியதொன்று.

மாணவர்கள் மாறுகின்ற உலகிற்கு முகம் கொடுக்ககூடிய வகையில், தமது வாழ்க்கையின் பல்வேறு தேவைகளுக்காக, பரந்த பல்வேறுபட்ட தேர்ச்சிகளை கற்கவேண்டும். அவர்கள் கல்வியை தொடர பல்வேறுபட்ட வழிகளும், தொழிலை தொடர் வதற்கான வழிகளும் காணப்படல் வேண்டும். பெரும் பான்மையான மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பதிறன் மட்டமானது வணிக மற்றும் கைத்தொழில் நடைமுறை தேவைகளை பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லை.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த தேர்ச்சிகளை விருத்திசெய்வதுடன், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் உயர்கல்வியைத் தொடர மாணவர்களுக்கு தேவையான அடிப்படைத் தளத்தினைக் கட்டியெழுப்புவது இத்தொடரின் பிரதான நோக்கமாகும். மாணவர்கள், பாடவிடயம் தொடர்பான சிறந்த விளக்கங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை அடையவும், வேலை உலகம் எதிர்பார்க்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன்களை விருத்திசெய்துகொண்டு வேலை உலகில் சிறந்த ஒரு இடத்தை தக்கவைத்துக் கொள்ள வகை செய்வதற்கும் ஏதுவாக இத்தொடரின் மூலம் களம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

**அலகு 01:** தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட் பவியல்

இவ் அலகினைக் கற்க முனைகையில் முதலா வதாக கணினி முறைமையின் அடிப்படை எண்ணக் கருக்களில் ஒன்றான தரவு என்பதனை தெளிவாக வரையறுக்க முயல்வோம்.

அன்றாட வாழ்வில் எமக்கு அடிப்படை விளக்கத்தை அளிக்கும் எவ்வகையிலும் அமைந்த, முறை வழிப்படுத்தப்படாத, தனித்து நின்று கருத்துக்களை வெளிப்படுத்தாத எண்கள், உருக்கள், எழுத்துக்கள், படிமங்கள், அளவீடுகள் ஆகியன தரவு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவுகள் எண்களாகவும், எழுத்துக்களாகவும், வரைபடமாகவும், புகைப்படமாகவும், ஒலியாகவும் அல்லது வீடியோப் படமாகவும் அமையலாம். உதாரணமாக,

- கடையொன்றின் குறித்த நாளொன்றில் ஏற்பட்ட மொத்த விற்பனை.
- நிறுவனமொன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் பெயர்
- ஓர் உற்பத்தியின் மாதிரி வரைபடம்
- ஓர் நிறுவனத்தில் நடைபெற்ற கூட்டத்தின் புகைப்படம்
- ஓர் ஊழியரின் மாதச் சம்பளம்
- நோயாளியின் உடல் வெப்பநிலை
- மாணவன் தவணைப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள்

அடுத்து நாம் தகவல் பற்றியும், தரவிற்கும் தகவலிற்கும் இடையிலான தொடர்பு பற்றியும் பார்ப்போம்.

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | பெயர் | புள்ளிகள் | |
| 3 | அன்ரன் | 56 | |
| 4 | குமார் | 76 | |
| 5 | மகிந்தன் | 46 | |
| 6 | சிறிதரன் | 68 | |
| 7 | தயாகரன் | 98 | |
| 8 | அறிவழகன் | 34 | |
| 9 | அம்பி | 12 | |
| 10 | சீலன் | 55 | |
| 11 | பாமினி | 46 | |
| 12 | குமுதினி | 20 | |
| 13 | கயல்விழி | 68 | |
| 14 | தமிழினி | 88 | |
| 15 | | | |
| 16 | | | |

உரு1

தரம் 10இல் கல்வி கற்கும் மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் உரு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

மேற்படி தரவில் இருந்து பயன்மிக்க, பொருத்தமான கருத்துக்கள் எவையும் பெரிதளவில் புலப்படவில்லை என்பது எமக்குப் புலனாகும். மேற்படி தரவுகளை யாதேனும் பொருத்தமான செயன்முறைகளுக்குட்படுத்தி பின் வருமாறு ஆராய்வோம்.

| | A | B |
|---|---|---|
| 1 | | |
| 2 | பெயர் | புள்ளிகள் |
| 3 | தயாகரன் | 98 |
| 4 | தமிழினி | 88 |
| 5 | குமார் | 76 |
| 6 | சிறிதரன் | 68 |
| 7 | கயல்விழி | 68 |
| 8 | அன்ரன் | 56 |
| 9 | சீலன் | 55 |
| 10 | மகிந்தன் | 46 |
| 11 | பாமினி | 46 |
| 12 | அறிவழகன் | 34 |
| 13 | குமுதினி | 20 |
| 14 | அம்பி | 12 |
| 15 | | |

உரு 2

மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளினடிப் படையில் இறங்கு வரிசைப் படுத்திய போது அவை உரு 2 இல் காட்டிய வாறு அமையும்.

மேற்படி ஒழுங்குபடுத்தலின் பின்னர் பின்வரும் தகவல் வெளிக் காட்டப்படுவதை அவதானிக்கலாம்.

- கணிதபாடத்தில் பெறப்பட்ட அதி உயர் புள்ளி
- கணிதபாடத்தில் பெறப்பட்ட இழிவுப் புள்ளி
- அதி உயர் புள்ளியைப் பெற்ற மாணவன்
- மிகக் குறைவான புள்ளியைப் பெற்ற மாணவன்

மேற்படி தரவினை அடிப்படையாகக் கொண்டு, கணித பாடத்தில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட சராசரிப்புள்ளியைக் கணித்தபோது அது

- அவ்வகுப்பில் கணித பாடத்தில் மாணவர்கள் சராசரியாக பெற்றுக்கொண்ட புள்ளி 55.58 ஆகும் என்ற தகவலினைத் தந்து நிற்கும் (உரு3) .

இது ஆசிரியர் தீர்மானம் மேற்கொள்ள உதவியாக இருக்கும்.


| | A | B | C |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | பெயர் | புள்ளிகள் | |
| 3 | அம்பி | 12 | |
| 4 | குமுதினி | 20 | |
| 5 | அறிவழகன் | 34 | |
| 6 | மகிந்தன் | 46 | |
| 7 | பாமினி | 46 | |
| 8 | சீலன் | 55 | |
| 9 | அன்ரன் | 56 | |
| 10 | சிறிதரன் | 68 | |
| 11 | கயல்விழி | 68 | |
| 12 | குமார் | 76 | |
| 13 | தமிழினி | 88 | |
| 14 | தயாகரன் | 98 | |
| 15 | | | |
| 16 | சராசரி | 55.58 | |
| 17 | | | |

உரு 3

மேற்படி தரவினை ஒழுங்குபடுத்தி வரை பாக்கிய போது உரு 4 இல் உள்ளவாறு அமையும்.

வரையினைப் பார்த்த கணத்திலேயே பல பயன் மிக்க தகவல்களை நாம் பெறமுடியும்என்பது எமக்குப் புலனாகும்.

உரு 4




இவ்வாறு தரவுகளை பொருத்தமான முறையில் முறைவழியாக்கம் செய்வதன் மூலம் பெறப்படும் கருத்துள்ள, பயன்படத்தக்க விடயம் தகவலாகும்.


குறித்த கருத்தைத் தரக்கூடியதாக சரியாக முறைவழிப்படுத்தப்பட்ட தரவுகள் தகவல்களாகும். உதாரணம்,

- இலங்கையின் சராசரி மழைவீழ்ச்சி
- மாணவன் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகள், சராசரிப் புள்ளிகள் க.பொ.த(உ.த) Z புள்ளி
- கடையில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் விலைப்பட்டியல்.

(வளரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்ப்பவரை ஈர்க்கும் கூகிள் டூடில்கள்!


சு.பிரதீப்,
வெள்ளவத்தை, கொழும்பு -6.









பிரபலமான தேடியந்திரமான கூகிள் தனது பாவனையாளரை ஈர்ப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துவருகிறது என்பது நீங்கள் அறிந்ததே. அவற்றுள், பார்வைப் புலனைக் கவரும் வகையில் கூகிள் தரும் கூகிள் டூடில் குறிப்பிடத்தக்க ஒன்று.

உலகின் முக்கிய தினங்கள், முக்கியஸ்தர்களின் பிறந்த தினங்கள் போன்றவற்றை நினைவுகூரும் வகையில் இந்த டூடில்களை கூகிள் வெளியிட்டு வருகிறது. தனது முகப்புப் பக்கத்தில் குறித்த நிகழ்வு அல்லது, நபர் சம்பந்தமான ஓவியத்தை கூகிள் பிரசுரிக்கும். சில சமயங்களில் அந்த ஓவியமானது அசைவுறு காட்சியா கவும் அமைக்கப்பட்டு பிரமிக்க வைக்கும்.

மிக எளிமையாக, அதே சமயம் பார்ப்பவரைக் கவரும் வகையில் இருக்கும் அந்த டூடில்களை க்ளிக் செய்தால், குறித்த நிகழ்வு அல்லது நபர் சம்பந்தப்பட்ட தேடல் பக்கங்களை கூகிள் பட்டியலிட்டுக்காட்டும். கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ண கால் பந்தாட்டப் போட்டித் தொடரின்போது கூகிள் வெளியிட்ட டூடில்கள் ஏராளமானவர்களை ஈர்த்திருந்ததோடு ஏராளமான பாராட்டையும் பெற்றிருந்தன.

அவ்வப்போது சில முக்கிய சந்தர்ப்பங்களில் டூடில் உருவாக்கப் போட்டிகளையும் சர்வதேச ரீதியில் நடத்தி பரிசுகளை வழங்கிவருகிறது கூகிள். இனி, கூகிள் தளத்துக்கு நீங்கள் செல்லும்போது டூடில் இருந்தால் கவனித்து இரசிக்கத் தவறாதீர்கள்.


## Advertisment Rate Card

**In Pages**

| Size | Full Colour | One Colour |
|---|---|---|
| Full Page (21.1cm x14.8cm) | 15,000 | 7,000 |
| Half Page (10.5cm x 14.8 cm) | 10,000 | 4,000 |
| 1/4 page (10.5cm x 7.4 cm) | 6,000 | 2,500 |
| Strip (4cm x 14.8cm) | 6,000 | 2,500 |
| Box (4cm x 7.4 cm) | 5,000 | 1,500 |

**Cover Page Full Colour**

Back - Rs. 25,000

Front in - Rs. 22,500

Back in - Rs. 20,000

கம்ப்யூட்டர் டுடே கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hack செய்யப்பட்ட facebook ஐத் திரும்பப் பெறுவதற்கு

Facebook தளத்தின் அறிவிப்பின் படி ஒரு நாளைக்கு சராசரியாக 600,000 Hacking முயற்சிகள் நடக்கிறதாம். நீங்கள் எவ்வளவு கடினமான கடவுச் சொல் வைத்திருந்தாலும் இப்பொழுது இருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியில் சுலபமாக கடவுச் சொல்லை திருடிக் கணக்கை முடக்கி விடுகின்றனர். அப்படி Facebook கணக்கை முடக்கிவிட்டால் எப்படி மீட்பது என பார்ப்போம்.

இதற்கு Facebook இல் ஒரு வசதி கொடுத்து உள்ளனர். அந்த வசதியின் மூலம் சுலபமாக hack செய்யப்பட கணக்கை திரும்பப் பெறலாம். நீங்கள் Facebook இல் இருந்தால் signout கொடுத்து வெளியேறுங்கள்.

பிறகு இந்த தொடுப்பிற்கு https://www.facebook.com/hacked செல்லுங்கள். உங்களுக்கு ஒரு window வரும். அந்த windowவில் உள்ள My Account Is Compromised என்ற பொத்தானைச் சொடுக்கவும்.


உங்களுக்கு அடுத்த window open ஆகும். அந்த window இல் உங்கள் கணக்கை திரும்பப் பெற பல வசதிகள் email, mobile number, friends name இருக்கும். அதில் உங்களுக்கு எந்த வழியில் வேண்டுமோ அந்த வழியை தேர்வு செய்து கொள்ளுங்கள். இங்கு எப்படி மின்னஞ்சல் மூலம் மீட்பது என பார்ப்போம்.


மின்னஞ்சல் முகவரியை கொடுத்த பின்னர் கீழே உள்ள Search என்ற பட்டனை அழுத்துங்கள்.

அடுத்து உங்களுக்கு இன்னொரு window open ஆகும். நீங்கள் கொடுத்த மின்னஞ்சல் முகவரியில் உள்ள facebook கணக்கை காட்டும்.

உங்கள் கணக்கில் கடைசியாக இருந்த கடவுச் சொல்லை அந்த இடத்தில் கொடுக்கவும். கடவுச் சொல்லை கொடுத்தவுடன் கீழே உள்ள Continue என்ற பொத்தானை அழுத்தவும். அடுத்த window open ஆகும். அதில் உள்ள Send Codes and Login to Gmail என்ற பட்டனை அழுத்தவும்.

உங்களுக்கு இன்னொரு Pop-up window open ஆகும். அதில் இந்த மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல் கேட்கும் அதை சரியாக கொடுத்த பின்னர் மின்னஞ்சலின் அனுமதி கேட்கும் அதில்









Allow கொடுத்து விட்டால் போதும் உங்களுக்கு ஒரு window வரும். இப்பொழுது புதிய கடவுச் சொல்லை தெரிவு செய்து கொண்டு கீழே உள்ள Change Password என்பதை கொடுத்து விட்டால் போதும் உங்களின் கணக்கு திரும்ப பெறப்படும். இனி நீங்கள் உங்கள் facebook கணக்கை எப்பொழுதும் போல உபயோகிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒவ்வொரு Folder க்கும் ஒவ்வொரு நிறத்தை கொடுக்க விருப்பமா ?




Microsoft இன் தயாரிப்பான Windows Operating System களில் வழமையாக மஞ்சள் நிறத்தில் மட்டுமே Folder கள் உருவாக்கலாம். அது Microsoft நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட நிறம் ஆகும். நாம் வழமையாக ஒரு File அல்லது Folder ஐ தேடும் போது எல்லா File மற்றும் Folder களும் ஒரே நிறத்தில் தான் இருக்கும். ஆனால் இப்பொழுது நீங்கள் அவற்றுக்கு நிறத்தை வழங்க முடியும். இதனை Folder Colourizer எனும் மென்பொருள் மூலம் செய்து கொள்ளலாம்.

தொடுப்பு : http://folder_colorizer.en.softonic.com

இந்த மென்பொருள் பின்வரும் நிறங்களை பிரதானமாக கொண்டிருக்கிறது: மஞ்சள் , பசும்புல் பச்சை, சிவப்பு, வெள்ளி, நீலம், ஊதா, மண்ணிறம் மற்றும் கடல்நீலம். Folder இற்கு நிறம் தெரிவு செய்ய Right Click செய்திடும் போது தோன்றும் Menu இல் colorizer இல் colours ஐ தெரிவு செய்யவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய உலாவிகள் பத்து...!

இணைய உலாவி என்று தமிழில் சொல்லப்படும் Browsers களும் தான் நாம் இணையத்தை பயன் படுத்தும் நேரங்களில் வேகத்தை தீர்மானிக்கின்றன. சில சமயங்களில் மிகப் பிரபலமான உலாவிகள் கூட நமக்கு Crash ஆகி பிரச்சினையை தரும். அந்த நேரங்களில் நமக்கு ஒரு மாற்று அவசியம். இங்கே பத்து சிறந்த Browser-களை உங்களுக்கு அறிமுகம் செய்யப்படுகின்றது.


## 1. Google Chrome

அறிமுகம் செய்த சில ஆண்டுகளிலேயே மிகப் பிரபலம் ஆன Browser என்றால் அது Google Chrome தான். வெறும் 4 நொடிகளில் உங்கள் முகப்பு பக்கத்தை திறந்து விடும். Open-Source Development வசதி கொண்ட மிகச் சில பிரவுசர்களில் இதுவும் ஒன்று.





## 2. FireFox

நெருப்பு நரி என்று செல்லமாய் அழைக்கப்படும் இது தான் இணையத்தில் பெரும்பாலானோர் விருப்பம். இது உங்கள் முகப்பு பக்கத்தை 6.3 நொடிகளில் திறக்கும் திறன் வாய்ந்தது. இதன் Patent Controls வசதி நம் தேடுதல் முடிவுகளை கட்டுபடுத்துகிறது. Open-Source Development வசதி இதிலும் உள்ளது.




## 3. Internet Explorer

Windows கணினிகளில் Default ஆக வரும் Browser இது. இது உங்கள் முகப்பு பக்கத்தை 4.3 நொடிகளில் திறக்கிறது. மற்றபடி மிக அதிகமான Option களை கொண்டிருப்பது இதன் பலவீனம் எனலாம்.




## 4. Opera

செல்பேசிகளில் மிக அதிகமானோர் பயன்படுத்தும் இது, கணினிகளிலும் அதிகமாகவே பயன்படுத்தப்படுகிறது. இது உங்கள் முகப்புப் பக்கத்தை திறக்க 5.1 நொடிகள் எடுத்துக் கொள்கிறது. Mouse மூலம் Shortcut வசதி தரும் சில Browser களில் இதுவும் ஒன்று. அத்தோடு இந்த பட்டியலில் Voice கட்டளைகளை கொண்டு Search வசதி கொண்ட ஒரே Browser இதுதான்.




## 5. Safari

Apple நிறுவனத்தின் தயாரிப்பான இது Windows கணினிகளிலும் இயங்குகிறது. இது உங்கள் முகப்பு பக்கத்தை 4.2 நொடிகளில் திறக்கிறது. பார்வைக்கு மிக அழகாக தெரியும் இது சில நேரங்களில் நீ என்ன சொல்வது நான் என்ன செய்வது என்று முரண்டு பிடித்து நின்று விடுவது இதன் பலவீனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 6. Maxthon

Chrome மற்றும் Firefox க்கு சிறந்த மாற்று. சிறந்த வேகம் கொண்ட இது 8 நொடிகளில் உங்கள் முகப்பு பக்கத்தை திறக்கிறது. பயனரின் விருப்பத்துக்கு ஏற்ப Theme தருவது இதன் சிறப்பு. Automatic Update வசதி இல்லாதது இதன் சின்ன குறை.




## 7. RockMelt

இது Browser இல்லை Wowser என்ற அடைமொழியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட இது மிக மிக மிக அருமையான ஒரு பிரவுசர். இது உங்கள் முகப்பு பக்கத்தை திறக்க 9.5 நொடிகள் எடுத்துக் கொள்கிறது. இதன் வேகம் மிகவும் அருமை. நிச்சயமாக Wowser தான் இது.





## 8. SeaMonkey

Firefox பயனாளிகளுக்கு நல்ல மாற்று என்றால் அது SeaMonkey தான். Mozilla நிறுவனத்தின் Source Code களை இது பயன்படுத்துவது அதன் காரணம் எனலாம். இது உங்கள் முகப்பு பக்கத்தை 5.7 நொடிகளில் திறக்கிறது. Open-Source Development வசதி இதிலும் உள்ளது.




## 9. Deepnet Explorer

Internet Explorer பயனர்களுக்கு மாற்று என்றால் இது எனலாம். இது உங்கள் முகப்பு பக்கத்தை 4.1 நொடிகளில் திறக்கிறது. Starting Page ஆக ஒன்றுக்கும் மேற்பட்ட பக்கங்கள் வைக்க முடிவது இதன் ஒரு சிறப்பு.



## 10. Avant Browser


சீனத் தயாரிப்பான இது உங்கள் முகப்பு பக்கத்தை 6.6 நொடிகள் எடுத்துக் கொள்கிறது. முந்தையது போல நிறைய Home Page களை வைத்துக் கொள்ள முடிந்தது இதன் ஒரு சிறப்பு.



நீங்கள் ஒரு பதிவர் என்றால் Chrome, Firefox க்கு ஒரு மாற்று வேண்டும் என்று நினைத்தால். IE, Rockmelt போன்றவற்றை பயன்படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பயனுள்ள ஒரு பயன்பாடு

# Virtual Router Manager

நமது கணினியில் நாம் ஏதாவது ஒரு இணைய இணைப்பு பயன்படுத்திக் கொண்டிருப்போம். அதே நேரத்தில் நமது செல்பேசியில்அல்லது tablet இல் Internet பயன்படுத்த வேண்டியிருக்கும். இதற்காக நாம் தனியாக காசு செலவழித்து அவற்றில் இணைய இணைப்பைப் பெற்றிருப்போம்.

இது போன்று நாம் செய்யத் தேவையில்லை. நீங்கள் உங்கள் கணினியில் பயன்படுத்தும் Internet இனையே உங்கள் செல்பேசியிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். உங்கள் செல்பேசியை மட்டும் அல்ல, tablet மற்ற கணினி என எல்லா wifi enabled சாதனங்களிலும் உங்கள் Internet ஐ பகிர்ந்து கொள்ளலாம்.

நீங்கள் உங்களது கணினியில் Internet இணைப்பை பயன்படுத்த Wifi, LAN, Cable Modem, Dial-up, Cellular,USB Dongle போன்றவற்றில் எதாவது ஒன்றை பயன்படுத்துவீர்கள். இதனை எந்தவொரு Router உம் இல்லாமல் உங்கள் கணினியில் இருந்தவாறே Wireless பயன்படுத்தக்கூடிய Laptop, Smart Phone, iPod Touch, iPhone, Android Phone, Netbook போன்றவற்றுக்கு Wireless மூலம் உங்கள் Internet ஐ பகிர்ந்து கொள்ளலாம்.

இதை எவ்வாறு செய்வது என்பதை காண்போம்

Virtual Router எனும் சிறந்த மென்பொருளின் மூலம் நீங்கள் பயன்டுத்தும் Internet ஆனது wifi மூலம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

1. முதலில் கீழுள்ள இணைப்பில் சென்று Virtual Router என்ற மென்பொருளை தரவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளவும்.

http://virtualrouter.codeplex.com

2. நிறுவிய பின்னர் Virtual Router மென்பொருளை செயற்படுத்தினால், படத்தில் உள்ளவாறு சாளரம் தோன்றும்.

அதில் Network Name (SSID) என்பதில் உங்களுக்கு விரும்பிய ஒரு பெயரை கொடுக்கவும். Password என்பதிலும் உங்களுக்கு விரும்பிய ஒரு Password இனைக் கொடுத்து Start Virtual Router என்பதை சொடுக்கவும். மேலும் தாங்கள் எந்த Internet இணைப்பை பகிர விரும்புகின்றீர்கள் என்பதையும் தேர்வு செய்து கொள்ளவும்.

3. இப்பொழுது உங்கள் கணினியில் இருந்து நீங்கள் கொடுத்த Network பெயரில் Wireless இணைப்பு பகிரப்படும். இதனை வேறு கணினி அல்லது Mobile Phone களுக்கு பயன்படுத்தவேண்டுமென்றால் நீங்கள் கொடுத்த Password ஐ கொடுத்து இணைப்பை இணைத்துக்கொள்ளலாம்.


நீங்கள் பயன்படுத்தும் Internet மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள உங்கள் கணினியில் wifi enable ஆக இருக்க வேண்டியது அவசியம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பதிவுகள் எங்கெங்கே சுடப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

வலைப்பதிவை நடத்துவதே போதாத வேலையென இருக்கும் போது நாம் சிரமப்பட்டு எழுதும் பதிவுகளை மற்றவர்கள் சுலபமாக பிரதிசெய்து தங்களின் வலைப்பூவில் போட்டு பேர் வாங்கிக் கொள்கின்றனர்.மேலும் எரிச்சலூட்டும் விதமாக பிரதி செய்த பதிவுகளையும் திரட்டிகளிலும் இணைத்து பிரதி செய்து போடுவதாக இருந்தால் பதிவின் இறுதியில் எழுதியது யாரென்றும் நமது பதிவிற்கான இணைப்பையும் கொடுத்தால் பரவாயில்லை. இதனால் வரும் பிரச்சினை என்னவென்று பாருங்கள். கூகிளில் தேடும் போது ஒவ்வொரு நேரம் நமது பதிவுகள் பின்னாடியும் பிரதி செய்யப்பட்ட பதிவுகள் முன்னேயும் வந்து விடும். கூகிள் தேடலில் தேடுபவர்களும்




விடுவார்கள். சில புண்ணியவான்கள் என்னமோ அவர்களே சொந்தமாக எழுதியதாக நினைத்து அதற்கு பதிவு நன்று பகிர்வுக்கு நன்றி என்று கருத்துரையும் இடுவார்கள். இந்த மாதிரி மட்டமான எண்ணமுடைய சிலருக்கிடையில் சில தளங்களும் பிரதி செய்கின்றன. பிரதி செய்வதைத் தடுக்க எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் இவர்கள் நிறுத்துவதாக இல்லை.




அந்த தளத்திற்குத் தான் முதலில் செல்வார்கள். சில நேரம் தேடலில் நமது பதிவுகளே இருக்காது. நமது வலைப்பூவிற்கு என இருக்கும் குறிப்பிட்ட தேடல் குறிச்சொற்களும் (Search Keywords) கூகிளால் நிராகரிக்கப்படும். இதை விட கொடுமை நாம் தான் பிரதி செய்துள்ளோம் என நினைத்து கூகிள் நமது வலைப்பூவை நீக்கிவிடும் அபாயமும் உள்ளது.


நமது பதிவுகளை எங்கெங்கே எந்த தளங்களில் பிரதி செய்துள்ளார்கள் என்பதை அறிய கீழ்க்கண்ட நான்கு இணையதளங்கள் உதவுகின்றன.

## 1.Copyscape

இந்த இணையதளம் உங்கள் பதிவுகளில், வடிவில், வலைத்தளங்களில் என எங்கிருந்தாலும் கண்டுபிடித்து கொடுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 2. Duplichecker

இதில் Text கோப்பில் இருக்கும் வரிகளை பதிவேற்றம் செய்தும் கூட பிரதியடிக்கப்பட்ட பதிவுகளைத் தேடலாம்.

## 3. Plagiarisma

இத்தளத்தில் குறிப்பிட்ட பதிவின் முகவரி அல்லது குறிப்பிட்ட சொற்களைக் கொடுத்தும் தேடலாம். இதிலும் txt, rtf, doc போன்ற கோப்புகளில் இருக்கும் கட்டுரைகளை பதிவேற்றம் செய்தும் தேடலாம்.

## 4. Plagium

இத்தளம் 25000 எழுத்துகள் வரை தேடக்கூடியது. இதில் நமது பதிவுகள் பிரதி செய்யப்பட்டிருந்தால் மின்னஞ்சலில் அறிவிப்பு வருமாறு செய்யலாம். எனது பதிவுகள் பல இடங்களில் பிரதியடிக்கப்பட்டுள்ளன. ஒருவர் கூட எனது தளத்திற்கான இணைப்பு கொடுக்கவில்லை. பதிவுகளை பிரதி செய்தவர்களின் பட்டியலை வெளியிட்டால் அவர்கள் தான் முக்கியத்துவம் பெறுவார்கள். இவர்களை என்ன செய்யலாம்?

*நன்றி : காருணியன்*

SPEED IT NET
"QUICK WAY TO ONLINE"

தனிப்பட்டவர்களிடமும் முகவரி இல்லாதவர்களிடமும் உங்கள் இணையத்தளங்களை பதிவு செய்து வடிவமைத்து கலங்கி நிற்கின்றீர்களா?

உங்களுக்கு ஒரு இணைய அடையாளத்தை உறுதி செய்ய விரும்புகின்றீர்களா?

2003 இல் இருந்து 12 வருடங்களாக அன்றும் இன்றும் என்றும் இணையத்துறையில் தனித்துவம்மிக்க சேவைகளை வழங்கும் Speed IT net நிறுவனத்தில் Domain Registration,Web hosting,We designing. Software Development சேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள், கவலையின்றியிருங்கள்.

★ நாங்கள் LK Domain Registry இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் ★


மேலும் தகவல்களுக்கு :
021 222 8358, 0777 563 213
Email : biz@speeditnet.com
Web: www.speeditnet.com

136, Palaly Road, Parameswara Junction,Thirunelvely




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூலால் ஆரம்பித்திருக்கும் விவாகரத்துக்கள்!




இலங்கையில் முகநூலால் விவாகரத்துகள் ஆரம்பித்து இருப்பதாக ஒரு தகவல் சொல்லுகிறது. விவாகரத்து கேட்கும் போது முகநூல் செயற்பாடுகளை காரணம் காட்டுவதாக சொல்லப்படுகிறது. மேலும் நாட்டில் தம்பதிகளுக்குள் நம்பிக்கை இன்மை அதிகரிக்க சமூக வலைதளங்கள் அதிக காரணமானதாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோல 2012 இல் "இணையதளத்தால் விவாகரத்து" என்ற பெயரில் எடுத்த ஆய்வு ஒன்றும் இந்த கருத்தை உறுதிப்படுத்துகிறது. இங்கிலாந்தில் நடைபெறும் மொத்த விவாகரத்துகளில் 1/3 பகுதி சமூக வலைதளங்களால் நடைபெறுவதாக அவர்கள் சொல்லுகிறார்கள்.




மேலும் Journal of Cyberpsychology என்ற இதழ் நடத்திய ஆய்வின் முடிவும் இதே கருத்தை ஒத்துப் போவதாகவே உள்ளது. அதிகமாக சமூக வலைதளங்களை பயன்படுத்துவது தனது வாழ்க்கைத் துணையை ஏமாற்றவே, என்பது இந்த ஆய்வு சொல்லும் செய்தியாகும்.

சமூக வலைதளங்கள் என்பது முந்தைய நட்பைப் புதிப்பித்துக் கொள்ள உள்ள வழியாகும். ஆனால் வாழ்க்கைத்துணை இதனை விரும்பாததால் இதனால் அதிக விவாகரத்து நடைபெறுகிறது. எல்லாக் கண்டு பிடிப்புகளிலும் இது போன்ற குறைகள் இருந்தாலும் அவற்றைத் தாண்டி அவை பல்வேறு நன்மைகளைத் தந்து கொண்டுதான் இருக்கின்றன.

சில தினங்களுக்கு முன் ஒரு செய்தி பரவலாகப் பேசப் பட்டது. அது முகநூல் பயன்படுத்துவோர் வேலை செய்யும் இடத்தில் சந்திக்கும் பிரச்சனை பற்றியதாக இருந்தது. அதிலும் சுயமி படங்கள் அதிகமாக அறிவதாகவும். வேலைக்கு விண்ணப்பிப்பவர்களின் முகநூல் பக்கங்களை நிறுவனங்கள் கண்காணிப்பதாகவும் செய்திகளே அவை. சமூகவலைதளங்கள் நம் தனி மனித வாழ்க்கையை பாதிக்காமல் எச்சரிக்கையாக நாம் பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "KEY LOGGER"




இணையத்தில் தகவல்களைத் திருட பல வழிகளில் ஒன்று தான் இந்த Key logger (Keystroke logging). உண்மையில் இந்த மென்பொருள் திருடுவதற்காக உருவாக்கப்படவில்லை.

முதலில் இந்த மென்பொருளின் பயன் என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

தங்கள் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களை தொடர்பு கொள்ளும் போ எதிர்காலப் பயன்பாடு மற்றும் சாட்சிக்காக தங்கள் இணையத் தகவல் பரிமாற்றங்களை பதிவு செய்து வைத்துக் கொள்ள உதவும் மென்பொருள் தான் இது.

இந்த மென்பொருளை நிறுவிவிட்டால், உங்கள் கணினியில் என்ன தட்டச்சு [Type] செய்தாலும் பதிவாகிக் கொண்டு இருக்கும், உங்கள் கடவுச்சொல் உட்பட. இதைப் பெரும்பாலும் வங்கி சார்ந்த நிறுவனங்கள் அதிகம் பயன்படுத்துவார்கள்.

இதை நீங்கள் அறியாமல் உங்கள் கணினியிலோ அல்லது பிரௌசிங் சென்டரிலோ நிறுவிவிட்டால், நீங்கள் என்னென்ன தட்டச்சு செய்கிறீர்களோ அத்தனையையும் ஒரு எழுத்து விடாமல் பதிவு செய்து விடும்.

உங்கள் மின்னஞ்சல் கணக்கின் பயனர் கணக்கு [User Account] கடவுச்சொல்லை [Password] இதன் மூலம் எளிதாகத் திருட முடியும். இந்த மென்பொருள் இருப்பதையும் உங்களால் அறிய முடியாது.


இதன் உண்மையான பயன்பாடு நல்லதுக்கு தான் என்றாலும், அதிகம் பயன்படுத்தப்படுவது என்னவோ திருடுவதற்குத் தான்.

இந்த Key logger மென்பொருளாக மட்டுமல்ல, ஹார்ட்வேயர் ஆகவும் இருக்கிறது. அதாவது, Keyboard இணைக்கும் இடத்தில் ஒரு கனெக்டர் போல ஒரு Key logger சாதனத்தை இணைத்து விட்டால் போதும், மென்பொருள் செய்யும் அனைத்து வேலையையும் இதுவும் செய்து விடும். எனவே தான், அறிமுகம் இல்லாத இடத்தில் முக்கியமான தகவல்களை பரிமாற்றம் செய்யக் கூடாது.

இதில் என்ன பெரிய ஆபத்து என்றால், உங்கள் தகவல்கள் திருடப்படுவது மட்டுமல்லாமல் நீங்கள் யார்? எப்படிப்பட்டவர்? எதை ரசிக்கிறீர்கள்? எதை வெறுக்கறீர்கள்? என்னென்ன தவறு செய்கிறீர்கள்? என்று ஒன்று விடாமல் எளிமையாக அறிந்து விடலாம். உதாரணத்திற்கு ஒருவர் வெளி உலகத்திற்கு நல்லவராக இருக்கலாம் ஆனால், தனிப்பட்ட முறையில் அவர் வேறு மாதிரி இருக்கலாம் அதுவும் இணையத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போது முதலில் 35 என்று தட்டச்சு செய்து பின் சுட்டியால் 3 இற்கு முன்பு சொடுக்கி 12 என்று தட்டச்சு செய்து பின் 3 இற்கு பிறகு சுட்டியால் 4 என்று தட்டச்சு செய்ய வேண்டும்.

நான் உதாரணத்திற்கு இந்த முறையில் கூறினேன் நீங்கள் எழுத்துக்களை மாற்றியும் இதைச் செய்யலாம்.

உங்கள் கடவுச்சொல் 12345 ஆனால், இந்த முறையில் 35124 என்று தட்டச்சு செய்யப் பட்டதாக Key Logger ல் காட்டும்.

புரியும் படி கூறுவதென்றால், key logger மென்பொருளை ஏமாற்றும் வழி இது. Key Logger வேலை தட்டச்சு செய்வதை பதிவு செய்வது. இதை இந்த வழியின் மூலம் ஏமாற்ற முடியும்.

எனவே, இதில் இருந்து கடவுச்சொல் கிடைத்ததாக நினைத்து எவர் முயற்சித்தாலும் அவர்களால் நுழைய முடியாது.

ஏனென்றால், திருடுபவர் 12345 என்பதற்குப் பதிலாக 35124 என்பதை முயற்சித்துக் குழம்பிக் கொண்டு இருப்பார்.

என்னென்ன செய்கிறார் யாரைத் ரகசியமாகத் திட்டுகிறார்? யாரிடம் கடலை போடுகிறார்? என்ன பேசுகிறார்? யார் யாருக்கு மின்னஞ்சல் அனுப்புகிறார்? என்று ஒன்றுவிடாமல் தெரிந்து விடும். சுருக்கமாக உங்கள் அந்தரங்கத்தைப் புட்டுப் புட்டு வைத்து விடும்.

நீங்கள் என்னென்ன ஆபாச தளங்கள் சென்றீர்கள்? எதை அதிகம் ரசிக்கிறீர்கள்? என்பது வரை தெரிந்தால், உங்களை எந்த விதத்தில் அணுகினால் மடக்கலாம் என்பதை வரை தெரிந்து விடும். இதே பெண்ணாக இருந்தால்..!

இதைப் படித்துக்கொண்டு இருக்கும் நீங்கள் (ஆணோ / பெண்ணோ) ஆபாசத் தளங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கலாம். இது பெரும்பான்மையானவர்களுக்கு இயல்பான செயல் என்றாலும், இது உங்கள் அந்தரங்கம். உங்கள் செயலால் யாருக்கும் பாதிப்பில்லை மற்றும் இவை வெளியே தெரியாத வரை பிரச்சனை இல்லை, தெரிந்துவிட்டால் அவர்களும் அதே செய்து கொண்டு இருந்தாலும், சந்தோசமாக அனைவருக்கும் இது குறித்துப் பரப்புவார்கள். தற்போது கூறுங்கள் இது மிக மிக ஆபத்தான தொழில்நுட்பம் தானே!

இது போல நேரங்களில் எப்படி பாதுகாப்பாக இருப்பது என்பதை எனக்குத் தெரிந்த அளவில் கூறுகிறேன். முடிந்த வரை எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்.

1. உதாரணத்திற்கு உங்கள் கடவுச்சொல் 12345 என்று இருப்பதாக வைத்துக் கொள்வோம்.

நீங்கள் உங்கள் கடவுச்சொல்லை தட்டச்சு செய்யும்

2. இதெல்லாம் மிகவும் சிக்கலானது. வேற ஏதாவது எளிமையான வழி சொல்லுங்க என்றால், உங்கள் மின்னஞ்சல் / முகபுத்தக கணக்கிற்கு இரட்டை அடுக்குப் பாதுகாப்பு முறையை செயல்படுத்துவது தான்.

இதன் மூலம் உங்கள் கடவுச்சொல் தெரிந்தாலும் குறுந்தகவலில் [SMS] வரும் security code இல்லை என்றால் ஒன்றும் செய்ய முடியாது.

3. Virtual keyboard மூலமாக உங்கள் கடவுச்சொல்லை பயன்படுத்தலாம் ஆனால், இந்த வசதி வங்கிக் கணக்குகளுக்கு மட்டும் தான் இருக்கும்.

நம்முடைய மின்னஞ்சல் கணக்குகளுக்கு கொஞ்சம் கூடுதல் வேலைகள் செய்ய வேண்டியது வரும் ஆனால், தற்போது இதையும் Hack செய்ய வசதி வந்து விட்டது.

4. மேற்கூறிய மூன்று முறைகளும் கடவுச்சொல்லை எப்படி பாதுகாப்பது? என்பது ஆனால், இந்த மென் பொருள் பிரச்சனைக்கு என்ன செய்வது என்றால்..

நீங்கள் அவசியம் Antivirus நிறுவி இருக்க வேண்டும். நீங்கள் பயன்படுத்தும் MicroSoft இயங்கு தளத்திற்கு (OS) இலவசமாகவே Microsoft Antivirus தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நிறுவலாம். அதுதான் Microsoft Security Essentials

அறிமுகம் இல்லாதவர்களிடம் உங்கள் கணினியைப் பயன்படுத்தக் கொடுக்கக் கூடாது. கண்டபடி Third Party மென்பொருள்களை நிறுவக் கூடாது. இது பற்றி விரிவாக இன்னொரு நாள் எழுதுகிறேன். நம்முடைய கணினி கெட்டுப் போக முழுக்காரணமே இது போன்ற மென்பொருள்கள் தான்.

**கொசுறு**


Chromecast பற்றி சென்ற இதழில் எழுதியிருந்தேன். இதனுடைய அடுத்த பரிமாணமாக இசையை மட்டும் இந்த முறையில் கேட்கும் வசதியை கூகுள் கொண்டு வந்துள்ளது.

இந்த வசதியில் பாடல்களைக் கேட்க கூகுள் அறிமுகப் படுத்தியுள்ள ஒலிப்பெருக்கிகளை வாங்கினால் மட்டுமே பயன்படுத்த முடியும். பல பிரபல நிறுவனங்களும் இதை தயாரிக்க முன்வந்துள்ளன. ஒரு சோகம் என்னவென்றால் இலங்கையில் இதைப் பயன்படுத்த இணையத்தின் வேகம் போதுமாதாக இருக்குமா தெரியவில்லை. அப்படியே வேகம் இருந்தாலும் Unlimited Bandwidth தேவை. அப்போது தான் நம் விருப்பத்திற்குப் பார்க்கலாம்.

என் வீட்டில் வெள்ளி இரவில் இருந்து ஞாயிறு இரவு வரை Chromecast கதறிக்கொண்டு இருக்கிறது. படமாகப் பார்த்துத் தள்ளிக்கொண்டு இருக்கிறேன் அதோடு YouTube இல் பாடல்களைக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். எனவே, வார இறுதி நாட்களில் இதற்கு ஓய்வு என்பது நான் தூங்கும் நேரம் தான்.

---

# கணினி பற்றிய அடிப்படை அறிவை பெற்றோருக்கு வழங்குகிறது Google




இன்றைய உலகில் கணினி மிக முக்கியமான சாதனமாக மாறிவிட்டது. இதனை பல்லாயிரக் கணக்கான மக்கள் உலகம் முழுவதுமாக உபயோகப் படுத்துகிறார்கள். எனவே இப்படிப்பட்ட பயன் தரும் கருவியைப் பயன்படுத்துவதற்கு உங்கள் பெற்றோர் களுக்கும் சொல்லிக் கொடுத்தால் எவளவு நன்றாக இருக்கும். இதற்காகவே Google ஓர் புதிய தளத்தை நிறுவியுள்ளது அதன் பெயர் "Teach Parents Teach" என்பதாகும்.

இதன் மூலம் கணினி பற்றிய அடிப்படை அறிவுகளை உங்கள் பெற்றோருக்கு புகட்டலாம். இதில் "Video Tutorials உம் உண்டு. இதனை பார்வையிட்டு உங்கள் பெற்றோர்கள் பயன் பெறலாம். இதோ இது தான் அந்த

**இணையதள முகவரி :** www.teachparentstech.org

# VLC இல் ஒளிந்திருக்கும் சில சிறப்புக்கள்...




கணினியில் பொதுவாக வீடியோக்களை பார்க்க தேர்ந்தெடுக்கும் விஎல்சி (VLC) பிளேயரில் உள்ள சில முக்கியமான சிறப்பம்சங்கள் உள்ளன. ஆனால் பலரும் வீடியோக்களை மட்டும் பார்ப்பதற்கு விஎல்சி பிளேயரை பயன்படுத்துகின்றனர். அதனால் இதில் உள்ள சில சிறப்பம்சங்களை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

### Video Effects

இதன் மூலம் வீடியோவின் வண்ணம், தேவையான பகுதிகளை தனியாக பிரிப்பது (cropping), மற்றும் உருப்பெருக்கம் போன்ற சிலவற்றை செய்ய முடியும்.

இதில் சாதராணமாக உள்ள வீடியோ Effect Option இல் Contrast, Brightness, Gamma ஆகியவற்றை செய்து வீடியோவை மெருகேற்றலாம். Sharpness Effect வீடியோவிற்கு தெளிவான தன்மையை கொடுக்கிறது. இதில் உள்ள Sigma-it Adjust செய்யும் போது வரும் மாற்றத்தை வீடியோவில் பார்க்கலாம். Transform வீடியோக்களை 360 டிகிரியில் மாற்றி அமைக்க உதவுகிறது.

### Geometry

வீடியோ Effect Option-இல் Geometry tab-இல் உள்ள Video Magnification/Zoom வீடியோவில் உள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் In & Out செய்து பார்க்க உதவுகிறது.

### Rotate option


இதன் மூலம் வீடியோவை எந்தவொரு Angle வேண்டுமானாலும் மாற்றியமைக்கலாம். இதில் கொடுக்கப்பட்டுள்ள Puzzle Game விளையாடுபவர்களுக்கு புதிய அனுபவத்தை கொடுக்கும்.

### Color fun

இதில் கொடுக்கப்பட்டுள்ள Color threshold மற்றும் Color Extraction மூலம் நமக்கு பிடித்த வண்ணங்களை வீடியோவுக்கு கொடுக்க முடியும்.

### Vout/Overlay

இதில் வீடியோவை நமக்கு ஏற்றவாறு பல்வேறு Row மற்றும் Colums மூலமாக Panoramic View-க்கு மாற்ற முடியும். இது ஒரு சிறந்த Feature ஆகும். இதன் மூலம் வித்தியாசமான அனுபவம் கிடைக்கும்.



### Adding Logo

இதன் மூலம் வீடியோவில் Left/ Right என தேவையான இடங்களில் Logo-வை பொருத்த முடியும்.

### Record Webcam Video

இது ஒரு சிறப்பான Feature ஆகும். இதன் மூலம் Webcam Video வை பதிவு செய்து வைத்துக் கொள்ள முடியும். வீடியோவை பதிவு செய்ய மீடியா மெனுவில் சென்று Capture Device-ல் Set செய்ய வேண்டும்.


### Take Snapshots

இந்த Feature வீடியோவில் இருந்து புகைப்படங்களை எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறது. இதன் மூலம் JPG, PNG புகைப்படங்களை பெற்றுக் கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக் குழந்தைகளுக்கான 5 திறந்தமூல மென்பொருள்கள்




**Tux Paint:** என்பது 3 முதல் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் படம் வரைவதற்காக உதவும்.

தொடுப்பு : http://www.tuxpaint.org/




**Scratch :**என்பது நிகழ்வு சார்ந்த நிரலாக்க (Event driven programming) மொழி. இம்மொழியைக் கொண்டு அசைவூட்டும் படங்கள், செயல்பாடுகள், கதைகள், விளையாட்டுக்கள் போன்றவற்றை உருவாக்கி மாற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள இயலும்.





**Stellarium :** என்பது வானிலுள்ள கோள்களின் உருவ அமைப்பை காண உதவும்.

தொடுப்பு : http://www.stellarium.org/



**Kalzium:** என்பது கட்டற்ற ஆவர்த்தன (Periodical table) அட்டவணை

மென்பொருள். இது தனிமங்களை பற்றிய விவரங்கள் அறிந்து கொள்ள உதவும் தொழில்நுட்பம்.




**GIMP** அல்லது **GNU Image Manipulation Program)** என்பது Abobe Photoshop மென் பொருளுக்கு நிகராக உருவாக்கப்பட்ட ஒரு பொது நிரலாக்க மென்பொருள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# APPLE நிறுவனம் கிளப்பிய USB-C சர்ச்சை!

Apple நிறுவனம் தனது புதிய MacBook மடிக்கணினியில் அனைத்து USB / HDMI Port களையும் நீக்கி, ஒரே ஒரு USB-C என்ற Port வசதியை மட்டும் கொடுத்து இருப்பது சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது.

வழக்கம் போல இதைப் பயன்படுத்துபவர்களை விட மற்றவர்கள் தான் அதிகம் கொந்தளித்துக் கொண்டுள்ளார்கள்.



அது எப்படி ஒரே ஒரு USB Port மட்டும் கொடுக்கலாம்? இது ரொம்பக் குறைவு! இதெல்லாம் போதவே போதாது. Apple நிறுவனம் இதை வைத்துக் கொள்ளை அடித்துக்கொண்டு இருக்கிறது என்று விவாதம் செய்து கொண்டுள்ளார்கள்.




பின்வரும் படத்தில் உள்ள Model USB-A & USB-B தான் நம் பெரும்பான்மையான பயன்பாட்டில் உள்ளவை.

**USB-A** USB Stick / External Harddisk போன்றவற்றை இணைக்கப் பயன்படுத்துவோம்.

**USB-B** பெரும்பாலும் கமராக்கு பயன்படுத்துவோம்.

USB-C தற்போது Apple நிறுவனம் கொண்டு வந்துள்ளது. இதை ஏற்கனவே சில நிறுவனங்கள் அறிமுகப்படுத்தி இருந்தாலும், Apple நிறுவனம் கொண்டு வந்த பிறகு ஒரே ஒரு Port என்பதால் சர்ச்சைக்குள்ளாகி அனைவருக்கும் அறிமுகமாகியது.


சர்ச்சையின் துவக்கம் CD Drive

துவக்கத்தில் மடிக்கணினி மிகப் பெரியதாக அதிக எடையுள்ளதாக இருந்தது. பின் நாளடைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேலும் சில USB Models**




இதனுடைய அளவு குறைந்து கொண்டே வருவதை அனைவரும் அறிந்து இருப்பீர்கள். Apple நிறுவனம் முதலில் CD Drive (தற்போது DVD Drive) இல்லாத கணினியை அறிமுகப்படுத்திய போது, இதே போல எதிர்ப்பு வந்தது.

அதற்கு Apple நிறுவனம், CD பயன்பாடு குறைந்து வருகிறது, இனி அனைத்துமே இணையம் மூலமே பெற்றுக் (தரவிறக்கம்) கொள்ளலாம். எனவே, CD பயன்பாடு எதிர்காலத்தில் இருக்காது என்று கூறி விட்டது.

இதற்கு அந்தச் சமயத்தில் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது.

பின்னர் சில வருடங்களுக்குப் பிறகு Apple நிறுவனம் கூறியது போலவே ஆகி தற்போது CD Drive பயன்பாடு முற்றிலும் குறைந்து விட்டது. ஆரம்பத்தில் இயங்குதளம் நிறுவ மட்டுமே பயன்பட்டது, தற்போது இதைப் பயன் படுத்துபவர்கள் குறைந்து விட்டார்கள்.

ஏதோ பேருக்கு இருந்து கொண்டு இருக்கிறது. உங்க ளுடைய கணினியில் எப்போது கடைசியாக DVD பயன்படுத்தினீர்கள் என்று யோசித்துப் பாருங்கள்!

தற்போது எடை குறைவாக வரும் மடிக்கணிகள் DVD Drive தவிர்த்து விடுகின்றன. தேவைப்பட்டால் External DVD Drive வாங்கிக்கொள்ளலாம்.

நான் DVD Drive இல்லாத Lenovo மடிக்கணினி வாங்கி 4 வருடங்கள் ஆகிறது. இதனுடன் இலவசமாக External DVD Drive கொடுத்தார்கள். ஆனால், இதைப் பயன்படுத்தியது இரண்டு முறை இருந்தாலே அதிகம்.

தற்போது நான் பணி புரியும் நிறுவனத்தில் மடிக் கணினியுடன் இணைந்து DVD Drive வாங்குவதை முற்றிலும் நிறுத்தி விட்டோம்.

## Adobe Flash in Mobile

இதன் பின்னர் “Adobe Flash அதிகம் சக்தியை (resource) எடுக்கிறது, பாதுகாப்பு இல்லை, Battery விரைவில் குறைகிறது. எனவே, Apple நிறுவனம் இதை மொபைலில் பயன்படுத்தாது. ஆனால், கணினி யில் தொடரும். இனி HTML 5 தொழில்நுட்பம் தான் எதிர்காலம்” என்று Apple நிறுவனர் Steve Jobs அறிவித்தார்.


மிகப்பெரிய அறிவிப்பு. இது இணைய உலகில் பெரிய சர்ச்சையானது. இருப்பினும் Apple நிறுவனம் தன் முடிவில் இருந்து மாறவில்லை.

பின்னர் விரைவிலேயே Adobe நிறுவனம் இதை ஏற்றுக்கொண்டு, HTML 5 தான் இனி எதிர்காலம் என்று கூறி விட்டது.

தற்போதும் Flash பயன்படுத்தும் தளங்கள் கவர்ச்சி கரமாக இருந்தாலும், பாதுகாப்பில் கேள்விக் குறியாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




USB-C

Steve Jobs மறைந்த பிறகு பொறுப்பிற்கு வந்த "Tim Cook" காலத்தில் தற்போது "ஒரே ஒரு USB-C" என்ற மிகப்பெரிய முடிவு எடுக்கப்பட்டு இருக் கிறது. இணையத்தில் கரித்துக்கொட்டிக்கொண்டு இருக் கிறார்கள்.

Apple நிறுவனம் தனது புதிய கணினியில் அனைத்து வகை Port களையும் நீக்கி ஒரே ஒரு USB-C என்ற வசதியை மட்டும் கொடுத்து இருக்கிறது. வேறு வகையில் கூறுவதென்றால் VGA, USB-A, USB-B, HDMI,eSATA போன்ற Port களை நீக்கி விட்டது.

அதாவது எந்தக் கூடுதல் சாதனத்தைப் பயன்படுத்த வேண்டி இருந்தாலும் இதற்கான Hub நீங்கள் பெற்றாக வேண்டும். பின்வரும் படம் எப்படிப் பயன்படுத்துவது என்பதை விளக்குகிறது. அதுவும் Power Cable இணைக்கவும் இதே USB-C Port டையே பயன்படுத்த




வேண்டும் என்பது தான் பலரை கோபத்தில் ஆழ்த்தி விட்டது என்று நினைக்கிறேன். எந்தச் சாதனத்தை இணைப்பது என்றாலும் இந்த Port ல் தான் இணைக்க முடியும். உதாரணத்திற்கு ஒருவர் ஒரே சமயத்தில் Mouse, Printer, External Keyboard, Projector, USB Stick சாதனம் இணைக்க வேண்டும் என்றால், இதில் செய்ய முடியாது.

ஏனென்றால், இதில் ஒரே ஒரு Port தான் இருக்கிறது. இது செயலிழந்தாலோ, சேதமடைந்தாலோ பெரும் சிக்கல்.

Apple நிறுவனத்தில் அனைத்துப் பொருட்களும் விலை அதிகம் என்பது அனைவரும் அறிந்தது.

எனவே, இதையும் (HUB) கட்டாயமாக வாங்க வேண்டிய நிலை ஆகிறது. இதனால் கூடுதலாக 9 USD அல்லது 79 USD செலவழிக்க வேண்டியது இருக்கும்.

அதோடு இந்த மடிக்கணியைப் பயன்படுத்துபவர்கள் USB Stick பயன்படுத்த வேண்டும் என்றால் USB-C வசதி உள்ள USB Stick வாங்க வேண்டும்.

இல்லையென்றால் மேலே உள்ள USB-C –, USB-A வாங்க வேண்டும்.

சிறியதாகவும் இருக்க வேண்டும். ஆனால், எல்லாமும் வேண்டும்!

நம் மக்கள் மடிக் கணினி சிறியதாக வேண்டும் என் பார்கள். ஆனால், அதில் அனைத்து வசதிகளும் பழைய மடிக்கணினி போலவே இருக்கணும் என்பார்கள். இது எப்படிச் சாத்தியம்?

இது எப்படி இருக்கிறது என்றால், வாலி படத்தில் விவேக்கிடம் பாலாஜி ஒரே மாத்திரையில் அனைத்து நோயும் குணமாகனும்!! என்று கேட்பாரே அது போல இருக்கிறது.

Apple நிறுவனம் என்ன கூறுகிறது என்றால், இனி எதிர்காலம் Wifi தான். எதைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் WIfi இருந்தாலே போதும் கூடுதல் Port தேவையில்லை என்று கூறுகிறது. DVD Drive போல இந்தப் Port களின் பயன்பாடும் குறைந்து விடும் என்கிறது.

Apple நிறுவனம் கூறுவதை முழுமையாக ஏற்றுக கொள்ள முடியாது என்றாலும் அவர்கள் கூறுவதில் உண்மையில்லாமல் இல்லை.

ஏன் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Apple நிறுவனம் வளர்ச்சி அடைந்த நாடுகளை வைத்தே இதைச் செயல்படுத்தியிருக்கிறது. வளர்ந்த நாடுகளில் WIfi என்பது எங்கும் கிடைக்கும் ஒரு வசதியாகி விட்டது.

எனவே, எந்தச் சாதனத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றாலும் Printer, Projector, Mouse, External keyboard & Power Supplல உட்பட Wifi இருந்தாலே போதும். இலங்கை போன்ற நாடுகளில் Wifi தற்போது தான் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் முழுமையான பயனைப் பெற வருடங்கள் ஆகும். வளர்ச்சி அடைந்த நாடுகளிலேயே அனைத்திலும் Wifi வசதி இருக்கிறது என்று எதிர்பார்க்க முடியாது.

நாம் உண்மையிலேயே அனைத்தையும் பயன்படுத்து கிறோமா!

பதட்டப்படாமல் யோசித்தால், உண்மையில் அனை வரும் ஒரே சமயத்தில் அனைத்து சாதனங்களையும் பயன்படுத்துவது என்பது குறைவு, எப்போதாவது வரலாம்.

உங்களுக்குச் சிறிய மடிக்கணினி தேவையென்றால் சில நடைமுறை சிரமங்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இவை தவிர்க்கவே முடியாது.

Apple நிறுவனம் MacBook கணினியில் மட்டுமே இந்த ஒரே ஒரு USB-C வசதியைக் கொண்டு வந்து இருக்கிறது. MacBook Pro வகை மடிக்கணினியில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அதில் வழக்கம் போலப் பல வகை Port கள் உள்ளன.

இது முற்றிலும் ஒருவரின் விருப்பம் சார்ந்ததே! யாரும் இதை வாங்கி ஆகணும் என்று கட்டாயப்படுத்த வில்லை. இதில் நமக்குத் தேவையான வசதிகள் இல்லையென்றால் புறக்கணித்து விட்டு நம் தேவைக்குத் தகுந்த கணினி வாங்கிக்கொள்ளலாம்.

Apple இல்லையென்றால் இன்னொரு நிறுவனத்தின் மடிக்கணினி அவ்வளவு தான். தேவை இருப்பவர்கள் வாங்கப்போகிறார்கள் மற்றவர்கள் புறக்கணிக்கப் போகிறார்கள்.

இதற்கு ஏன் சண்டை?!

தற்போது சிரமமாக இருந்தாலும், எதிர்காலத்தில் Apple நிறுவனத்தின் முடிவையே அனைவரும் பின்பற்றுவார்கள் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். அதாவது கூடுதல் Port பயன்பாடு குறைந்து விடும்.

என்னுடைய விண்டோஸ் கணினியில் நான் எப்போதாவது USB Stick / External Hard Disk பயன்படுத்துகிறேன். மற்றபடி தொடர்ச்சியாக எந்தச் சாதனத்தையும் இணைப்பதில்லை. எனவே, Apple நிறுவனத்தின் முடிவு வரும் காலத்தில் சரி என்றே நிரூபிக்கப்படும்.

ஒரு Port வைத்ததற்குப் பதிலாக இரண்டு Port வைத்து இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. இது கூடலாம்தான். Apple இந்தக் கணினியை அறிமுகப்படுத்திய போது வாங்கலாம் என்று நினைத்து இருந்தேன் ஆனால், ஒரே ஒரு Port என்பதை அறிய வந்த போது, வாங்கும் எண்ணத்தை ஒத்தி வைத்து விட்டேன்.

பின்னாளில் இதையே வாங்கலாம் அல்லது வேறு கணினியை வாங்கலாம். அப்போதைய மன நிலையைப் பொறுத்தது.

### கொசுறு

இணையத்தில் இரண்டு பெரிய குழுக்கள் உள்ளது. Apple ஆதரவாளர்கள் / எதிர்ப்பாளர்கள். Apple எந்தத் தயாரிப்பை வெளியிட்டாலும் இரண்டு வாரத்திற்கு இணையம் ரத்த பூமியாக இருக்கும். சண்டை சண்டை சண்டை தான்.

Apple நிறுவனத் தயாரிப்புகள் விலை அதிகம் என்ப தாலும், பயன்படுத்த சில நடைமுறை சிக்கல்கள் இருப்பதாலும் இதைக் கிண்டலடித்து அவ்வப்போது meme வரும். Apple நிறுவனத்தின் விலையைக் கிண்டலடித்தாலும் அதனுடைய தரம் எவராலும் கொடுக்க முடியாது.

எங்கள் அலுவலகத்தில் Corporate Mobile 75% iPhone (நான் உட்பட) தான். ஆனால், பிரச்சனை என்று இதுவரை ஒரே ஒரு iPhone தான் கடைசி இரண்டு வருடத்தில் புகார் வந்துள்ளது.


Apple நிறுவனத்தின் மடிக்கணினி, கணினி, iPhone என்று எதுவுமே முதலில் வாங்கும் போது மட்டுமே அதிக முதலீடு ஆனால், இதன் மறு விற்பனை மதிப்பு (Resale value) அதிகம். எனவே, பழைய சாதனத்தை விற்று புதிய சாதனம் அதிக முதலீடு இல்லாமல் வாங்க முடியும்.

நான் Apple ரசிகனல்ல. ஆனால், இதைப் பயன்படுத்து பவன் என்ற முறையில் இதன் தரத்தை உணர்ந்தவன். பின்னாளில் Google Nexus முயற்சிக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

நன்றி : சைபர் சிம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உங்கள் கணித அறிவை விருத்தி செய்ய ஓர் இணையத்தளம்!!

பல பேர் கணித அறிவில் சிறந்தவர்களாக விளங்குவார்கள் சிலபேருக்கு கணிதம் விளங்காமல் மிகவும் அவஸ்தைப்படுவார்கள். அப்படி அவஸ்தைப்படுபவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது ஒரு இணையம். இதன் மூலம் நீங்கள் ஒவ்வொரு கணித பிரிவுகளையும் அறிந்து கொள்ளலாம்.


சிறுவர்களுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கும் கணித அகராதியான A Maths Dictionary For Kids தான் அந்த தளம்.

அகராதிகளில் பல வகை உண்டு இல்லையா? ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழியில் உள்ள சொற்களுக்கு அர்த்தம் பார்க்க உதவும் பொதுவான அகராதிகள் தவிர குறிப்பிட்ட துறைகளுக்கான அகராதியும் உண்டு. அந்த வகையில் கணித பாடத்தில் அடிப்படையான விஷயங்களுக்கான அர்த்தத்தை தெரிந்து கொள்ளும் வகையில் இந்த அகராதி உருவாக்கப்பட்டுள்ளது. கணித பாடத்தில் ஏதாவது ஒரு பதம் சரியாக புரியவில்லை என்று வைத்து கொள்ளுங்கள் அதற்கான அர்த்தத்தை இந்த தளத்தில் தேடிப் பார்க்கலாம். அகராதியில் எப்படி பொருள் தேடுவோமோ அதே போல இந்த தளத்திலும் குறிப்பிட்ட சொல்லுக்கான பொருள் தேடலாம். அகராதியை போலவே அகர வரிசையில் சொற்களுக்கான பட்டியல் இடம் பெற்றுள்ளது. விளக்கம் தேவைப்படும் சொல்லின் ஆரம்ப எழுத்தை இந்த பட்டியலில் பார்த்து சொடுக்கினால் பொருள் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணத்திற்கு "டிகேட்" என்றால் என்ன என்றோ அல்லது "டிரில்லியன்" என்றால் என்ன என்ற சந்தேகமோ ஏற்பட்டால் அந்த சொல்லுக்கான பொருளை தெரிந்து கொள்ளலாம். அதே போல "ஹெக்சகன்" என்பது எதை குறிக்கும் என்று குழப்பமாக இருந்தாலும் அதற்கான விளக்கத்தை அறிந்து கொள்ளலாம். "மில்லினியம்" என்பது எதை குறிக்கும் "வென் டயகிராம்" என்றால் என்ன என்று சந்தேகம் ஏற்பட்டாலும் அவற்றுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொருளை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு கணித பாடம் தொடர்பான பதங்களுக்கு விளக்கம் தேவை என்றால் இந்த அகராதி கை கொடுக்கும்.

இது சிறுவர்களுக்கான அகராயாகையால் இதில் விளக்கங்களும் சுவாரஸ்யமான முறையில் கொடுக்கப்பட்டுள்ளன. வழக்கமான அகராதி போல வெறும் அர்த்தத்தை மட்டும் தராமல் அந்த அர்த்தத்தை எளிதாக புரிய வைக்க கூடிய அழகான விளக்கமும் இடம் பெற்றுள்ளது. பல இடங்களில் இந்த விளக்கம் அனிமேஷன் வடிவிலும் இருப்பது தான் சிறப்பு.

இந்த அனிமேஷன் விளக்கத்தால் அர்த்தமும் எளிதாக புரிவதோடு அந்த விளக்கத்தை தெரிந்து கொள்வதில் கூடுதல் சுவாரஸ்யமும் உண்டாகும். உதாரணத்திற்கு டிரில்லியன் என்ற சொல்லையே எடுத்துக்கொள்வோம்.

எண்ணிக்கையில் நூறு ,ஆயிரம், லட்சம் போல மில்லியன், பில்லியன் அதற்கடுத்து டிரில்லியன் வருகிறது. டிரில்லியன் என்றால் லட்சம் கோடி என்று பொருள். அதாவது மில்லியன் மில்லியன். இது எத்தனை பெரிது என்று எளிதாக உணர்த்துவதற்காக இந்த அகராதி டிரில்லியன் என்றால் பத்தின் பன்னி ரெண்டு மடங்கு என்று விளக்கம் தருகிறது. அருகி லேயே 12 முறை வரிசையாக பத்தை பெருக்கி காட்டுகிறது. அதற்கு கீழே உள்ள பகுதியில் கிளிக் செய்தால் டிரில்லினனை நீங்களே எண்ணிக்கையில் எழுதிப் பார்க்கலாம். அதாவது பத்தை பணிரெண்டு முறை கிளிக் செய்தால் அந்த எண்ணிக்கை தோன்றுகிறது.

இது ஒரு சின்னஞ்சிறிய அனிமேஷனாக தரப்பட்டுள்ளது. இதே போல முப்பரிமாணம் என்னும் 3D இற்கும் சின்ன அனிமேஷனோடு விளக்கம் தரப் பட்டுள்ளது.

இந்த அனிமேஷன் விளக்கங்கள் பல இடங்களில் நாமே விளையாடி பார்க்க கூடிய புதிர் விளையாட்டு போல இருக்கிறது. டிஸ்டன்ஸ் என்ற சொல்லுக்கு இரண்டு புள்ளிகளுக்கு இடையிலான நீளம் என்று பொருள் தெரிந்து கொள்வதோடு அதற்கான உதாரணமாக கொடுக் கப்பட்டுள்ள பறவைகளுக்கு இடையிலான தூரத்தை நாமே ஸ்கேல் கொண்டு அளந்து பார்க்கலாம்.

அதே போல பைதகரஸ் பற்றிய விளக்கத்தில் வெவ்வேறு வகையான முக்கோணங்களை உருவாக்கி பார்க்கலாம். இப்படி எல்லா விளக்கங்களுமே அதன் மீது ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய அழகான அனிமேஷன் விளக்கத்தோடு அமைந்துள்ளன. தேவையான இடங்களில் எண்கள் மற்றும் வரைபடத்துடனான விளக்கமும் தரப்பட்டுள்ளன.

ஆக கணித பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கம் தருவதோடு புதிய புதிய கணித பதங்களுக்கான அர்த்தத்தை அறிந்து கொள்ளும் ஆர்வத்தையும் இந்த தளம் ஏற்படுத்துகிறது. எடுத்து கொண்ட விசயத்தை மிக எளிதாக புரியவைத்து சுவாரஸ்யத்தையும் உண்டாக்குவதால் இந்த அகராதியில் உள்ள மற்ற சொற்களையும் வரிசையாக கிளிக் செய்து பார்க்கத் தோன்றும்.

எல்லா பதங்களுமே எளிமையாக புரியும் வகையில் இருப்பதால் கணிதம் மீதான மிரட்சி நீங்க ஆர்வம் ஏற்பட்டு விடும்.

அகராதி தவிர கணித வரைப்படங்களுக்கான பகுதியும் இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTER இல் உள்ள DRIVERS களை மறைக்க..!! எதுவிதமான SOFTWARE உம் இல்லாமல்..!!

உங்கள் கணினியில் உள்ள drivers களை எவ்வாறு மறைப்பது என்பதை பற்றி காண்போம். இதற்கு பல வழிகள் இருக்கலாம் பல மென்பொருட்கள் இருக்கலாம் ஆனால் அந்த மென்பொருட்கள் நாம் காசு கொடுத்து வாங்க வேண்டி வரலாம். அதனால் உங்களுக்கு மிகவும் எளிதான முறையில் இங்கே விளங்கப்படுத்தப்படுகின்றது. கவனம் இது மிகவும் ஆபத்தானது.

முதலில் Win + R ஐ அழுத்துங்கள். தோன்றும் Run box இல் CMD என்று Press செய்யவும். பிறகு comment ஆனது open ஆகும். அதில் கீழ்கண்டவாறு type செய்யவும். DISKPART என்று type செய்யவும். பிறகு list Volume என்று type செய்யவும். பிறகு உங்களுக்கு தேவையான அதாவது நீங்கள் மறைக்க விரும்பும் drive இனை தேர்வு செய்ய வேண்டும். மறைக்க விரும்பும் drive ஆனது E என்றால் select volume E என்று type செய்யவும். நீங்கள் என்ன drive இனை மறைக்க விரும்புகிறீர்களோ அதை தெரிவு செய்து கொள்ளலாம். அதாவது select volume D, select volume F என்று type செய்யவும்.

பிறகு Remove letter E என்று type செய்யவும். இப்போது E drive ஆனது இல்லாமல் இருக்கும்





மறைத்த drivers களை எவ்வாறு திரும்ப பெறுவது :

மேற்கண்டவாறே தொடர்ந்து எல்லாவற்றையும் type செய்து கொண்டே வாருங்கள்

DISKPART, List Volume, Select Volume E

இப்போது remove letter E ற்கு பதிலாக Assign Letter E என்று type செய்யவும். இப்போது உங்களுக்கு hide செய்யப்பட்ட drive ஆனது திரும்ப வந்திருக்கும்.

**குறிப்பு:** இதை எப்போதும் அடிக்கடி செய்து பார்க்க வேண்டாம். எப்போதாவது உங்களுக்கு முக்கியமான தருணங்களில் மட்டும் செய்யவும் அடிக்கடி செய்வதன் மூலம் உங்கள் drive ஆனது delete ஆகவும் செய்யலாம் மிகவும் கவனமாக செய்யவும்.



```
C:\Windows\system32\diskpart.exe

Microsoft DiskPart version 6.1.7600
Copyright (C) 1999-2008 Microsoft Corporation.
On computer:NITHAL

DISKPART> list volume

  Volume ###  Ltr  Label        Fs     Type        Size     Status     Info
  ----------  ---  -----------  -----  ----------  -------  ---------  --------
  Volume 0                      NTFS   Partition    350 MB  Healthy    System
  Volume 1     C                NTFS   Partition     48 GB  Healthy    Boot
  Volume 2     F   SOFTS        NTFS   Partition     78 GB  Healthy
  Volume 3     D   MEDIA        NTFS   Partition     83 GB  Healthy
  Volume 4     E   MEDIA-2      NTFS   Partition     88 GB  Healthy
  Volume 5     G                       Removable      0 B   No Media

DISKPART> select volume E

Volume 4 is the selected volume.


DISKPART> Remove Letter E

DiskPart successfully removed the drive letter or mount point.

DISKPART>
```



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் மொபைல் அடிக்கடி Hang ஆகுதா ?

எம்மில் பெரும்பாலானவர்கள் இன்று அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் Android OS ஐ நமது மொபைல்களில் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். இதை நாம் அனைவரும் உபயோகிக்க காரணம் என்ன தெரியுமா? கூகிள் நிறுவனம் இதை இலவசமாக வெளியிட்டதால்தான் பல மொபைல் நிறுவனங்கள் இதனை தன்னுடைய மொடல்களில் உட்படுத்தி மிகவும் குறைந்த விலையில் உலகச் சந்தைகளில் விற்பனைக்கு கொண்டு வந்தார்கள். மிகக்குறைந்த விலை என்பதால் மக்களிடத்திலும் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது.


இந்த OS வேண்டாம் என்று விலகி இருந்த Nokia வும் தற்பொழுது இதை பயன்படுத்த தொடங்கியிருக்கிறது ஏனென்றால் பல பல புதிய செயலிகள் Android மொபைல்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றன.

சரி நாம் வந்த விசயத்தை கவனிக்கலாம். நமது மொபைல்களில் Hang ஆவதை எப்படி சரி செய்வது ?

அதை முழுமையாக சரிசெய்ய முடியாது. ஆனால் அதை நம்மால் கட்டுப்படுத்த முடியும். அதற்கான தீர்வுதான் இது.

நாம் மொபைல் வாங்கிய புதிதில் அது Hang ஆவதில்லை. அதில் நாம் பல செயலிகளை நிறுவிய பின்னர்தான் அதனுடைய வேகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக தடுமாற்றம் ஏற்படுகிறது. அப்படியென்றால் செயலிகள் எல்லாம் அழித்து விடவேண்டுமா என்று நினைக்க வேண்டாம். அதை அழிப்பதினால் உங்களது போனின் வேகம் கூடப்போவது இல்லை. அதனுடைய உபயோகத்தை நிறுத்த வேண்டும்

அதாவது சில பேர் எனது மொபைலில் நிறைய இடம் இல்லை. ஆதலால் செயலிகளை Memory card இல் தான் வைத்துள்ளேன். இருந்தாலும் இடப்பற்றாக்குறை ஏற்படுகிறது என்ன செய்ய என கேட்பார்கள். என்னதான் நாம் அனைத்து செயலிகளையும் Memory





Card மாற்றினாலும் அந்த செயலிகளின் சில முக்கிய கோப்புக்கள் Memory Card க்கு மாறுவது இல்லை அது நமது போனிலேயே தங்கி விடுகிறது. இதுதான் இந்த இடப்பற்றாக்குறைக்கு காரணம் :

சில பேர் கேட்பீர்கள். அதாவது என்னுடைய போனில் நிறைய இடம் இருக்கிறது Memory Card இலும் அதிக இடம் இருக்கிறது. ஆனாலும் மொபைல் Hang ஆகிறது . அவர்கள் அனைவரும் இந்த படத்தை உற்று பாருங்கள் இது Settings, app,running பகுதியில் Ram Memory யின் உபயோக அளவு இதுதான். நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியது நமது போன் வேகமாக இயங்க போன் Memory யோ external memory யோ freeஆக இருப்பதால் கிடையாது முழுக்க முழுக்க Ram Memory இன் அளவில் அதிக இடம் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீங்கள் உங்களது போனில் Settings, app ,running என்ற பகுதிக்கு செல்லுங்கள். அங்கு உங்கள் அனுமதி இல்லாமல் இயங்க கூடிய அனைத்து செயலிகளையும் Force Stop கொடுத்து நிறுத்தி விடுங்கள் நாம் அவ்வாறு செய்வதினால் மட்டுமே Ram memory இன் அளவை அதிகரிக்கச் செய்ய முடியும் ,இப்பொழுது போனின் ram memory இன் அளவை பாருங்கள். எவ்வளவு இடம் Free யாக உள்ளது என்று. சரி இதை செய்து முடித்ததும் அடுத்து நாம் செய்ய வேண்டியது அதில் குறிப்பிட்டிருக்கும் data. அது அனைத்து செயலிகளிலும் நம் உபயோகத்தை பொறுத்து இருக்கும் அதை ஒரு முறை clear செய்து விடுங்கள். பிறகு நமது போனில் இருக்கும் 3D மற்றும் ANIMATION WALLPAPERகளை நிறுத்தி விடுங்கள்.

HOME SCREEN இருக்கும் அதிக APPLICATION SHORTCUT களை அழித்து விடுங்கள். history,call logs, messages போன்றவற்றை அதிகம் மொபைலில் தேக்கி வைக்காதீர்கள். மேற்கண்ட அனைத்தையும் நீங்கள் கடைபிடிப்பதினால் உங்களது போன் வேகமாக இயங்குவதை உங்களால் உணர முடியும்.

தமிழ் fm

## தமிழ் FM இல் வாரநாட்களில்

மாலை 3 மணி முதல் 5 மணி வரை

பொது அறிவு, தகவல் தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், அறிமுகங்கள் இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களுடன் ஒலிபரப்பாகும்,

## 'ஆறாம் அறிவு'

நிகழ்ச்சியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்து 'கம்ப்யூட்டர் ருடே' வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்!

தமிழ் FM முத்தமிழின் மூச்சுக்காற்று

யாழ்ப்பாணம் 99.7 FM
வன்னி 99.5 FM
நாடு முழுவதும் 107.8FM
www.tamilfm.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PENINSULA
Technologies (Pvt) Ltd

Our
Services

Sales
Repair
Imports
Computer Consultation
Computer Education

Email : peninsulatechno@gmail.com
255 1/1, Stanly Road, Jaffna
Tel : 077 8475072



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகரில்

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University



edexcel

# HNDs IN...

- Quantity Surveying
- Civil Engineering
- Biomedical Science
- Business Management
- Computing

**சவால்களை வெல்லும்**
**சர்வதேச கல்வித் தகைமைகள்**

Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கையின் முதற்தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற் கான வாய்ப்பு.

மேலுள்ள துறைகளில் (HND) ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 இற்கு மேற்பட்ட பிரித்தானிய, அமெரிக்க, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப் படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு.

கடந்த 15 வருடங்களில் (HND) உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடு களிலும் உயர் தொழில் வாய்ப்புக் களை பெற்றுக் கொண்ட ஆயிரக் கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.



**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
**Hotline : 077 710 2131**

15 YEARS of Trust & Excellence in Higher Education
www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org